Registered as a NewsPaper

விலை: ரூபா 7.00




ஈழநாதம்

மக்கள் நாளிதழ்

பக்கங்கள் - 12

நாதம் 15 | திருவள்ளுவர் ஆண்டு 2035 | ஆனி-23 | 07-07-2004 | புதன்கிழமை | ஓசை -140

# நோர்வே-இந்திய வெளிவிவகார அமைச்சர்கள்

# இல. இனப்பிரச்சினை குறித்து ஆராய்வு!

## இரு தரப்பு இடையில் அமைச்சர் மட்ட ஆணைக்குழு அமைக்கவும் முடிவு


(புதுடில்லி)

**புதுடில்லியில் இந்திய-நோர்வே வெளியுறவு அமைச்சர் மட்டத்தில் நடைபெற்ற பேச்சுவார்த்தையில் இலங்கை இனப்பிரச்சினை விவகாரம் முக்கிய விவகாரமாக காணப்பட்டதோடு இருநாட்டு விவகாரங்களையும் கையாள்வதற்கென உயர்மட்ட ஆணைக்குழு ஒன்றை அமைப்பது தொடர்பாகவும் இணக்கம் காணப்பட்டுள்ளது. இது தொடர்பான உடன்பாடு இன்று கைச்சாத்தாகலாம் எனத் தெரிவிக்கப்படுகின்றது.**



நேற்று முன்தினம் மூன்று நாள் விஜயமொன்றை மேற்கொண்டு புதுடில்லிக்குச் சென்ற நோர்வே வெளியுறவுத்துறை அமைச்சர் ஜான் பீற்றர்சன், இந்திய வெளியுறவுத்துறை அமைச்சர் கே.நட்வந்சிங், தேசியப்பாதுகாப்பு ஆலோசகர் ஜே.என்.டிக்சிற், வெளியுறவுத் துறை அமைச்சின் பேச்சாளர் நௌதேசனா, வர்த்தக அமைச்சர் அமல்நாத் ஆகியோரைச் சந்தித்துப் பேச்சுவார்த்தை நடத்தி யிருந்தார்.

இந்தப் பேச்சுவார்த்தையின் போது இலங்கையில் சமாதான முயற்சிகள் குறித்து முக்கியத்துவம் கொடுத்து ஆராயப்பட்டுள்ளது. அத்துடன் இந்திய-பாகிஸ்தான் உறவுகள் பற்றியும் ஈராக் நிலைமைபற்றியும் இரு நாடுகளுக கிடையே மின்சக்தி எண்ணைத் துறையில் ஒத்துழைப்பை மேம்



படுத்துவதை விசேடஅம்சமாகக் கொண்டும் ஆராயப்பட்டுள்ளது. இந்தக் கலந்துரையாடலின் முடிவில் (12ஆம் பக்கம் பார்க்க)

## வடமராட்சிக் கடற்பரப்பில் 3 மீனவரைக் காணவில்லை

(யாழ்ப்பாணம்)

வடமராட்சிக் கடற்பரப்பில் மீன்பிடித்தொழிலுக்குச் சென்ற மூன்று மீனவர்கள் கடந்த ஞாயிற்றுக்கிழமை இரவு முதல் காணாமல் போயுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

மயிலிட்டி பகுதியிலிருந்து இடம் பெயர்ந்து இன்புருட்டிப் பகுதியில் வசித்து வந்த சி.தீபன் (வயது21), த.ஸ்ரீஸ்கந்தராசா (வயது39) எனும் இருமீனவர்களும் மற்றும் வியாபாரி மூலை இடம் பெயர்ந்தோர்முகாமில் வசித்து வந்த மீனவர் ஒருவருமே கடந்த ஞாயிறு மாலை 5.30 மணியளவில் படகொன்றில் தொழிலுக்குச் சென்றுள்ளனர். எனினும் நேற்றுக் காலை வரை அவர்கள் கரைதிரும்பவில்லை.

இதனையடுத்து மீன்பிடிப்படகுகளில் சகமீனவர்கள் தேடுதலில் ஈடுபட்டிருந்த போதிலும் அவர்கள் தொடர்பாகவோ, அவர்கள் பயணித்த படகுகள் தொடர்பாகவோ எந்தவொரு தடயமும் கிட்டியிருக்கவில்லை.

இதேவேளை கடற்பரப்பில் சுமுகமான காலநிலை நிலவியிருக்கின்றமையால் கடற்கொந்தளிப்பு எவற்றிலும் இவர் (12ஆம் பக்கம் பார்க்க)

## கொக்குவில்-பூநாறி மடத்தடி வீதி விபத்தில் குடும்பஸ்தர் பலி

(யாழ்ப்பாணம்)

கொக்குவில்-பூநாறி மடத்தடிப் பகுதியில் நேற்றுக் காலை இடம் பெற்ற வீதிவிபத் தொன்றில் சிக்கி குடும்பஸ்தர் ஒருவர் உயிரிழந்துள்ளார். வீதியில் வந்துகொண்டிருந்த மோட்டார் சைக்கிளொன்றும் துவிச்சக்கர வண்டியொன்றும் மோதிக்கொண்டதில் துவிச்சக்கர வண்டியில் பயணித்த பொன்னுத்துரை ஜெகநாதன் (வயது35) என்பவர் உயிரிழந்துள்ளார்.

நேற்றுக்காலை 10.30 மணியளவில் இடம் பெற்ற விபத்துச் சம்பவத்தையடுத்து அங்கிருந்து மீட்கப்பட்ட அவரது சடலம் யாழ். போதனா வைத்தியசாலையின் பிரேத அறையில் பொலிசாரால் ஒப்படைக்கப்பட்டுள்ளது. (27)

## நீதி கோரி மருத்துவ பீடமாணவி தொடர் உண்ணாவிரதப் போராட்டம்

### பரீட்சையில் பழிவாங்கப்பட்டமை உட்பட நான்கு குற்றச்சாட்டு

யாழ் பல்கலைக்கழக மருத்துவ பீடத்தில் நீதி கோரி மருத்துவ பீட மாணவியொருத்தி தொடர் உண்ணாவிரதப் போராட்டமொன்றை நேற்று ஆரம்பித்துள்ளார்.

கடந்த மூன்று வருடங்களாக 2ஆம் ஆண்டிற்கான பல்கலைக்கழக மருத்துவ பீடத்தின் உள்ளகப் பரீட்சையில் தோல்வியுற வைக்கப்பட்டமை மற்றும் மருத்துவ பீட மாணவி என்ற நிலையிலிருந்து நீக்கப்பட்டமை உள்ளிட்ட நான்கு விடயங்களை முன்நிறுத்தியே இத்தொடர் உண்ணாவிரதப் போராட்டத்தினை குறித்த மாணவியான செல்வி. சி. புஷ்பமாலா ஆரம்பித்துள்ளார்.

தான் தோற்றிய பரீட்சை வினாத்தாள்கள் உரிய குழுவினால் மீளாய்வு செய்யப்பட வேண்டுமெனவும், மருத்துவ பீட மாணவி என்ற நிலையிலிருந்து நீக்கப்பட்டமை தொடர்பாக விசாரணைகள் முன்னெடுக்கப்பட வேண்டுமெனவும் அவர் கோரியுள்ளார்.

இதேவேளை, குறித்த மாணவியின் தொடர் உண்ணாவிரதப் போராட்டம் தொடர்பாக மருத்துவ பீடம் ஆதரவாகவோ எதிராகவோ செயற்படமாட்டாதென அறிவிக்கப்பட்டுள்ளது. இதனிடையே குறித்த மாணவி பல்கலைக்கழக மருத்துவ பீட நிர்வாகத்தால் தான் பழிவாங்கப்படுவதாக இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ அலுவலகத்தில் முறைப்பாடும் செய்துள்ளார். (27)

## ஜே.வி.பி.யின் மோட்டார்கார் பவனியை பொலிசார் தடுத்து நிறுத்தி விரட்டினர்

(கொழும்பு)

மொரவக நகரில் ஜே.வி.பி.யினர் தேர்தல் பிரச்சாரத்தின் போது நடத்திய மோட்டார்கார் பவனியை சிறிலங்காப் பொலிசார் தடுத்து நிறுத்தி வேட்பாளரையும், ஆதரவாளர்களையும் விரட்டியடித்தனர்.

தற்போது நடைமுறையிலிருக்கும் தேர்தல் சட்டங்களை ஜே.வி.பி.யினர் மீறி செயற்பட்டதாக பொலிசார் தெரிவித்துள்ளனர்.

இச்சம்பவம் குறித்து ஜே.வி.பி.யினர் மொரவக பொலிசாருக்கெதிராக முறைப்பாடு செய்துள்ளனர்.

## முச்சக்கரவண்டி பள்ளத்தில் பாய்ந்தது ஓட்டுநர் உட்பட அறுவர் படுகாயம்

(அலுவலக செய்தியாளர்)

முச்சக்கரவண்டி மதவுடன் மோதி பள்ளத்தில் பாய்ந்ததில் முச்சக்கரவண்டி ஓட்டுனர் உட்பட அறுவர் படுகாயமடைந்துள்ளனர்.

மேற்படி சம்பவம் நேற்று பிற்பகல் 1.00 மணியளவில் டிப்போவீதி சேவியர் கடைச் சந்திக் அண்மையில் இடம் பெற்றுள்ளது. கிளிநெச்சியிலிருந்து கோணாவில் நோக்கிச் சென்ற முச்சக்கரவண்டியே விபத்திற்குள்ளாகியுள்ளது.

இச்சம்பவத்தில் ஆட்டோவில் பயணித்த கனகம்மா (வயது-45) என்பவர் கால் முறிந்தநிலையில் கிளி. மாவட்ட வைத்தியசாலைக்கு எடுத்துவரப்பட்டு மேலதிக சிகிச்சையின்பொருட்டு யாழ்.போதனா வைத்தியசாலைக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளார். முச்சக்கரவண்டி ஓட்டுனர் க.பேரின்பநாதன் கிளி.மாவட்ட வைத்தியசாலையில் சிகிச்சைபெற்று வருகின்றார்.




மற்றைய நால்வரும் சிகிச்சைபெற்று வைத்தியசாலையிலிருந்து வெளியேறியுள்ளனர்.

இவ் விபத்துத் தொடர்பான விசாரணைகளை தமிழீழ காவல்துறை வீதிப் (12ஆம் பக்கம் பார்க்க)

## நேர்முகத்தேர்வு கால எல்லை நீடிப்பு

தமிழீழ தேசியத்துணைப்படைக்கான முதலாவது நேர்முகத்தேர்வு 23.06.2004 அன்று தொடக்கம் 30.06.2004 வரை நடைபெற்றது. இந்நேர்முகத்தேர்விற்கு மட்டக்களப்பு, அம்பாறை, திருகோணமலை, யாழ்ப்பாணம், ஆகிய மாவட்டங்களில் இருந்து பல விண்ணப்பதாரர்கள் தாம் குறித்த கால எல்லைக்குள் வரமுடியவில்லை எனவும் கால எல்லையை நீடித்து உதவுமாறும் வேண்டிக்கொள்வதற்கமைவாக மேலும் இக்கால எல்லையானது 06.07.2004 தொடக்கம் 20.07.2004 வரை நீடிக்கப்பட்டுள்ளது. இக்கால எல்லைக்குள் கிளிநொச்சியில் அமைந்துள்ள காவல்துறை நடுவப்பணியகத்திற்கு காலை 8.00 மணிமுதல் 5 மணிவரையில் விண்ணப்பதாரர்களை நேர்முகத் தேர்விற்கு சமுகம் அளிக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

## என் அம்மாவின்

### 31ஆம் நாள் நினைவில் நனைந்து...

மலர்வு 28-06-1933 உதிர்வு 07-06-2004



**அம்பலவாணர், மங்களம்**

ஒரு குழந்தையாய்...
அலை நனைத்த
காலக்கரையினில்
தாயே நீயும் மலர்ச் செடியாய்

தாயாகி உன்னை அர்ப்பணித்த
திருப்தியுடன்
மூச்சை நிறைத்தாயோ! ஒரு முடிவுரைக்குள்
ஆனாலும் அம்மம்மா!
இரங்கலுரைக்கு உரியவளல்ல நீ
மாவீரமுளையொன்றின் தாயாகிய உன்னை
மண்ணின் தாயாகவும்
குறிப்பெழுதிக் கொண்டது வரலாறு.

அம்மாவென்றழைத்து
ஆனந்தப்பட்ட நெஞ்சுகளில்
முள்ளேறிப்போச்சுது
என் தாயையும் எந்தனையும் உறவுகளையும்
தாங்கி வளர்த்த உன் தாய்மையின் தாராளம்
எல்லோர் விழிகளையும்
துளிகளால் நிரப்புகிறது - எனினும்
அவர்கள் அழுவதை விரும்பமாட்டாய் அல்லவா...?
ஆதலால் ஒரு அசரீதி சொல்லிவை தாயே
அழாதீர்கள் என்று...

இந்த உறவுச் சிற்பங்களை
செதுக்கிப்போன சிற்பியாய்
உள்ளங்கள் ஒவ்வொன்றிலும்
தொட்டுப்பேசும் உயிர்த்துளியாய்
நிசப்தத்தில் உறங்கும்
ஒரு சின்னக் குழந்தையாய்
தாயே நீ...
உன் நினைவுகளை
நெஞ்சில் சேமித்தபடி
காலத்தில் நகரும் கடமையில் எல்லோரும்

விரியும் பூவில்
சொரியும் வானில்
தாய்மையின் குறியீடாய்
என்றும் குழந்தையாய்
தாயே நீ....

**வி. ஜெயசீலன்**
போராளி

(சி-10006)

# பணி வேண்டுகை கோரல்

பாண்டியன் வாணிபத்தில் கீழ்வரும் பணிநிலைக்கான வேண்டுகைகள் தகுதியானவர்களிடம் இருந்து கோரப்படுகின்றன. கீழ்வரும் தகுதிகளை உடைய ஆர்வமுள்ளவர்கள் மட்டும் வேண்டுகை செலுத்தவும்.

## களஞ்சியக்காப்பாளர் / பதிவாளர்

கல்வித் தகைமை :- க.பொ.த. சாதாரணதரத்தில் தேர்ச்சியடைந்திருத்தல் (க.பொ.த.சாதாரண தரத்தில் வர்த்தகம் கற்றவர்களுக்கும், க.பொ.த.உயர்தரத்தில் வர்த்தகம் கற்றவர்களுக்கும் முன் னுரிமை வழங்கப்படும்)

ஆண், பெண் இருபாலாரும் விண்ணப்பங்களைச் செலுத் தலாம்.

## விற்பனையாளர்கள்

கல்வித் தகைமை :- ஆண்டு 10இல் கல்வி கற்றவர்கள்.

ஆண்கள் மட்டும்.

## பொது

அகவை :- 18-40
சம்பளம் :- நிதித்துறை சம்பளத்திட்டத்துக்கு அமைய
வேண்டுகை முடிவுத்திகதி :- 12-07-2004

வேண்டுகை செலுத்த வேண்டிய முகவரி,
**பாண்டியன் வாணிபம் - கிளிநொச்சி.**
**பாண்டியன் வாணிபம் - புதுக்குடியிருப்பு.**
**பாண்டியன் வாணிபம் நடுவப் பணிமனை - விசுவமடு.**

ஆளுகை,
பாண்டியன் வாணிபம்,
விசுவமடு.

(சி-10002)


சமுதாய முன்னேற்ற நிலையத்தினரின் நலிவுற்றோர் நல வாழ்வுத்திட்ட நிதிக்காக நடாத்தப்படும்

# மாபெரும் மாயா ஜால காட்சிகள்



மாயாஜால காட்சிகளின் பிரதம ஆசிரியரான சாம் அவர்களின் முதன்மை மாணவன் கோ.கோணேஸ் அவர்களும், அவரின் குழுவினரும் இணைந்து நடாத்தும் மாயாஜால காட்சிகள் இன்று தொடக்கம் தமிழீழம் எங்கும் காண்பிக்கப்படுகின்றது.

- 12 வயதுச் சிறுமியின் அதிபயங்கரக் காட்சிகள் உட்பட
- பார்ப்போரை மெய்சிலிர்க்க வைக்கும்
- பார்க்காதோரைப் பார்க்க வைக்கும்
- கேட்டோரைப் பார்க்கத்தூண்டும்



**நிகழ்வுகளைக் காணத் தவறாதீர்கள்**

(சி:10005)

# 200 பேரை பலி கொண்ட ஸ்பெயின் ரயில் குண்டு வெடிப்பு:

# புலனாய்வுத் தகவல் கிடைத்தும் தடுக்க அரசு முயலவில்லை

## ~விசாரணை ஆணைக்குழு தகவல்

(மட்ரிட்)

**ஸ்பெயினில் கடந்த மார்ச் மாதத்தில் ரயில் குண்டு வெடிப்புத் தொடர்பாக ஆராயும் ஸ்பெயின் பாராளுமன்ற ஆணைக்குழுவின் விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. குண்டுவெடிப்பு இடம் பெறுவதற்கு முன்னர் புலனாய்வுத்தகவல்கள் கிடைத்தபோதும் இதனைத்தடுக்க ஸ்பெயின் அரசாங்கம் முயலவில்லை என்ற குற்றச்சாட்டு தற்போது எழுந்துள்ளது.**

இத்தாக்குதலில் இருநூறுக்கும் அதிகமானோர் உயரிழந்ததுடன் பலர் காயமடைந்தனர். இந்த தாக்குதல் நடத்தப்படுவதற்கு முன்னர் இதுபற்றி புலனாய்வுத் தகவல்கள் கிடைத்தபோதும் ஸ்பெயின் அரசு இவற்றை கவனத்தில் கொண்டிருக்கவில்லை.

ஸ்பெயின் ரயில் நிலையத்தில் குண்டுவெடிப்பின் பின்னர் கிடைத்த தடையங்களை ஆராயும் மேற்படி விசாரணைக்குழு சம்பவத்தை நேரில் கண்டவர்களிடம் விசாரணைகளை நடத்தப் போவதாகவும் தெரிவித்துள்ளது. ஸ்பெயின் பாராளுமன்ற ஆணைக்குழு விசாரணைகளை நடத்தும் முறை குறித்தும் அந்நாட்டு பொதுமக்கள் தமது அதிருப்தியை வெளியிட்டுள்ளனர். அமெரிக்காவின் செப்டம்பர் தாக்குதலின் போது விசாரணை நடத்திய ஆணைக்குழு அமெரிக்க சனாதிபதி உட்பட ஆயிரம் பேரிடம் ஒன்றரை வருடத்திற்குள் விசாரணைகளை நடைத்தியிருந்தது. இந்த விசாரணையுடன் ஒப்பிடும் போது ஸ்பெயின் பாராளுமன்ற ஆணைக்குழுவின் விசாரணைகள் மிகவும் பலவீனமானதாக உள்ளதென்று அவர்கள் குற்றம் சாட்டியுள்ளனர்.

### 11 குழந்தைகள் உயிரிழப்பு

பிகார் வைசாலி மாவட்டத்தில் விஷ உணவு அறிகுறியுடன் காணப்பட்ட கோயில் பிரசாதத்தை உண்ட 11 குழந்தைகள் பலியானதுடன் 68 பேர் உடல் நலக் குறைவால் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.



அபுகிறைப் சிறையிலிருந்து விடுவிக்கப்பட்ட கைதிகளை ஏற்றிச்செல்லும் பேருந்து பாதையில் காவல் கடமையிலீடுபட்டுள்ள அமெரிக்க படைச்சிப்பாய்.



வெனிசுவெலாவின் சுதந்திர தினமான நேற்று முன்தினம் அந்நாட்டின் காட்டில் யுத்தம் புரிய பயிற்றுவிக்கப்பட்ட படையணியின் அணிவகுப்பு.

# சதாமுக்கு மரணதண்டனையா? நீதிமன்றமே முடிவு செய்யும்

## ஈராக் இடைக்காலப் பிரதமர்

முன்னாள் அதிபர் சதாம் ஹுசைன் அவரது கூட்டாளிகளுக்கு மரண தண்டனை விதிக்கப்படுமா என்பதை ஈராக் நீதிமன்றமே முடிவு செய்யும் என்று இடைக்காலப் பிரதமர் அஜத் அல்லாவி திங்கட்கிழமை தெரிவித்தார். அல் அரேபியத் தொலைக்காட்சி நிலையம் இச்செய்தியை வெளியிட்டுள்ளது. சர்வதேச நியதிகளை மீறி போரின் போது கொடும் குற்றம் இழைத்தது உட்பட பல்வேறு குற்றச்சாட்டுக்கள் தொடர்பாக சதாம் மற்றும் அவரது கூட்டாளிகளிடம் ஈராக் சிறப்பு நீமிமன்றம் விசாரணை நடத்தி வருகிறது. குற்றம் நிருபணம் ஆகிவிட்டால் அவர்களுக்கு என்ன தண்டனை என்பது நீதிமன்றமே முடிவு செய்யும்.

அதன் முடிவு எதுவாகவிருந்தாலும் அதை ஏற்பேன். விசாரணை பலமாதங்களுக்குத் தொடரும் என்று எதிர்பார்க்கவில்லை என்றார் அல்லாவி. அமெரிக்கா இராணுவத்தின் பாதுகாப்பில் இருந்த சதாம் கடந்த வாரம் ஈராக்கின் இடைக்கால அரசுவசம் விசாரணைக்காக ஒப்படைக்கப்பட்டார்.

முன்னதாக ஈராக்கில் அமுலில் இருந்து வந்த மரணதண்டனையை ரத்துச் செய்தது அமெரிக்கக் கூட்டணிப் படைநிர்வாகம். ஆனால் இடைக்கால அரசு பதவியேற்றதும் மரண தண்டனை நடைமுறை மீண்டும் கொண்டுவரப்பட்டுள்ளது. 1998 இல் ஹலாப்யாப் பகுதியில் குர்தியினமக்கள் இராசாயன ஆயுதங்களைப் பயன்படுத்திக் கொன்று குவித்தது. தெற்கு ஈராக்கில் 1991 இல் நடந்த கலவரத்தின் போது ஷியா இனமக்களை படுகொலை செய்தது 1990 இல் குவைத் மீது ஆக்கிரமிப்புச் செய்தது உள்ளிட்டதை சதாம் மீது சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டுக்களில் சில கோர்ட்டில் வியாழக்கிழமை சதாம் ஆஜரான போது பத்திரிகைகளில் அவரைப் பற்றிய செய்தி பிரதானமாக இடம் பெற்றது. அவருக்கு மரணதண்டனை கிடைக்குமா என்ற விவாதமும் சூடுபிடித்துள்ளது.



ஈராக்கின் நசிறியா நகரில் ரோந்து சுற்றும் இத்தாலியப் படையினர்

# எய்ட்ஸ் தடுப்பு உச்சி மாநாடு ரத்து

தாய்லாந்து நாட்டின் பாங்காக் நகரில் அடுத்த வாரம் நடைபெறுவதாக இருந்த எய்ட்ஸ் தடுப்பு முதல் உச்சிமாநாடு ரத்துச் செய்யப்பட்டது. அழைப்பு விடுக்கப்பட்ட பல நாட்டின் தலைவர்களிடம் இருந்து மாநாட்டில் கலந்து கொள்வது தொடர்பாக பதில் ஏதும் வராததால் மாநாடு ரத்துச்செய்யப் படுவதாக தாய்லாந்து அரசு அதிகாரி ஒருவர் திங்கட்கிழமை தெரிவித்தார். வரும் ஞாயிற்றுக்கிழமை எய்ட்ஸ் தடுப்பு உச்சி மாநாட்டை நடத்தத் திட்டமிட்டிருந்ததாகவும், அதற்காக பிரேசில், சீனா, இந்தியா, நைஜீரியா, ரஷியா, உகண்டா ஆகிய நாடுகளின் தலைவர்களுக்கும், ஐ.நா. தலைமைச் செயலருக்கும் அழைப்பு விடுக்கப்பட்டிருந்ததாகவும் கடந்த மேமாதம் தாய்லாந்து பிரதமர் தக்சின்சினவத்ர அறிவித்திருந்தார்.



பாங்கொக்கிலிருந்து 150 கி.மீ தொலைவிலுள்ள லொப்பூரி மாகாணத்திலுள்ள புத்த விகாரையில் எயிட்ஸ் நோயாளி ஒருவர்.

# பயங்கரவாதச் சட்டத்தை நீக்கும் மசோதா நடப்பு கூட்டத்தொடரில் கொண்டுவரப்படும்

## –பிரதமர் மன்மோகன்சிங்

இந்தியப் பயங்கரவாத சட்டத்தை திரும்பப் பெறுவதற்கான மசோதா நடப்பு கூட்டத்தொடரில் கொண்டுவரப்படும் என்று இந்தியப் பிரதமர் மன்மோகன்சிங் உறுதியளித்துள்ளார்.

குஜராத் கலவரத்தில் பாதிக்கப்பட்டவர்களுக்கு வாழ்வு அளிக்க வேண்டும் எனக் குழுவொன்று மன்மோகன் சிங்கை நேற்று முன்தினம் சந்தித்துள்ளது. கோத்ரா ரயில் எரிப்புக் குறித்து புகையிரத அறிஞர்கள் விசாரணை நடத்த வேண்டும். குஜராத் மாநிலத்தில் பதிவு செய்யப்பட்டுள்ள பொடோ வழக்குகள் அனைத்தையும் வாபஸ் பெறவேண்டும் எனும் கோரிக்கையடங்கிய மனுவையும் இவர்கள் பிரதமரிடம் கையளித்துள்ளனர்.

இந்தக்குழுவிடம் பேசிய மன்மோகன்சிங் பொடோ சட்டத்தை திரும்பப் பெறுவதற்கான மசோதா நடப்பு வரவு செலவுக் கூட்டத்தொடரிலேயே கொண்டு வரப்படும் என்றும் உறுதியளித்துள்ளார்.

நாட்டின் பலபகுதிகளில் பாதுகாப்புக் குறித்த சாவால்களை எதிர்கொள்வது குறித்து தீவிரமாக ஆராய்ந்த பின்னரே பொடோ சட்டம் நீக்கல் மசோதா கொண்டு வரப்படவுள்ளதாகவும் அவர் கூறியுள்ளார்.

## 18பேர் பலி; பலரைக்காணவில்லை

தைவானில் கடுமையான புயற்காற்றுடன் மழை பெய்ததால் 18 பேர் நேற்று முன்தினம் உயிரிழந்துள்ளனர். பலரைக்காணவில்லை என்று தைவான் அரசு கூறியுள்ளது.

தைவானில் தெற்குப்பகுதியிலுள்ள நாகமலைத் தொடர்ப்பகுதியில் புயலுடன் கூடிய மழை பெய்துள்ளது. ஆயிரக்கணக்கான பரப்பளவு அறுவடை நெற்பயிர்கள் வெள்ளத்தில் மூழ்கியுள்ளன.

ஏராளமானோர் வீடுகளை இழந்துள்ளனர். இராணுவத்தினர் மீட்பு பணிகளில் ஈடுபட்டுள்ளனர்.



சூடானின் கிழக்குப் பகுதியிலுள்ள அகதிகள் முகாம் ஒன்றில் குடிதண்ணீருக்காக காத்திருக்கும் அகதிகள்.

# விசர்நாய்க்கடி தடுப்பு மருந்து இல்லை கிளி.மாவட்ட வைத்தியசாலையில் நெருக்கடி!

*சிகிச்சைக்காக வெளியிடங்களுக்குப் பலர் அனுப்பிவைப்பு*

(அலுவலக செய்தியாளர்)

**கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலையில் விசர்நாய்க்கடிக்கான மருந்துவகைகள் இல்லாமையின் காரணமாக விசர்நாய்க்கடிக்குள்ளாகி வரும் நோயாளர்களுக்கு மாவட்ட வைத்தியசாலையில் சிகிச்சை மேற்கொள்ள முடியாத அவல நிலை ஏற்பட்டுள்ளது.**

கடந்த 4ஆம் திகதியன்று கிளிநொச்சி கிருஸ்ணபுரத்தில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த 7பேர் விசர்நாய்க்கடிக்குள்ளாகிய நிலையில் கிளி.மாவட்ட வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். விசர்நாய்க் கடிக்கான (ஏ.ஆர்.எஸ்) மருந்து மாவட்ட வைத்தியசாலையில் இல்லாமையின் காரணமாக மல்லாவி அரசினர் வைத்தியசாலையிலிருந்து ஏ.ஆர்.எஸ். மருந்து எடுத்துவரப்பட்டு மேற்படி விசர்நாய்க் கடிக்குள்ளானவர்களுக்கு சிகிச்சை மேற்கொள்ளப் பெற்றதாகத் தெரியவந்துள்ளது.

இதே போன்று நேற்று முன் தினம் மட்டும் கிளி.மாவட்டத்தில் ஒன்பது பேர் விசர்நாய்க்கடிக்குள்ளான நிலையில் கிளி.மாவட்ட வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு விசர்நாய்க்கடி ஊசி மருந்து (ஏ.ஆர்.எஸ்) பெறும்வகையில் வைத்தியசாலை நோயாளர் அம்புலன்ஸ்வண்டி மூலம் வவுனியா பொது வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாகவும் அறியக்கிடைத்துள்ளது.

கிளிநொச்சி மாவட்டத்தில் அண்மைக்காலமாக விசர்நாய்க் கடிக்குள்ளாகி வருபவர்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

தற்போது ஏற்பட்டுள்ள கடும் வெப்பம் காரணமாக வளர்ப்பு நாய்கள் முதல் கட்டாக்காலி நாய்கள் பல விசர் நோய்க்குள்ளாகியுள்ளதன் விளைவாகவே விசர்நாய்க் கடிக்குள்ளானோரின் தொகை அதிகரித்துள்ளதென தெரிவிக்கப்பட்டுள்ளது. (சோ.கு)



கிளிநொச்சி புதுமுறிப்பு குளத்திலிருந்து உருத்திரபுரம் பகுதிக்கு நீர் பாயும் வாய்க்கால் நிக்கொட் திட்டத்தின் கீழ் புனரமைக்கப்படுவதைப் படத்தில் காணலாம். (படம்:- வரன்)

### "விழி" இதழ் வெளிவந்துள்ளது

கிளிநொச்சி சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையினரின் ஜூலை மாதத்திற்கான "விழி" மருத்துவ இதழின் 46ஆவது இதழ் வெளிவந்துள்ளது. இவ் இதழ் வளரும் பிள்ளைகளின் நிறை உயர வேறுபாடு, பித்தப்பைக் கோளாறு, கட்டாக்காலி நாய்களைக் கட்டுப்படுத்தல், மூத்தோர் பராமரிப்பு போன்ற பல்வேறு விடயங்களை உள்ளடக்கி வெளிவந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

### இன்று நடைபெறும்

கிளிநொச்சி- கோணாவில் புனித செபஸ்ரியார் முன்பள்ளியின் விளையாட்டுப்போட்டி இன்று பிற்பகல் 2.00 மணிக்கு நடைபெறும். கிளி/முல்லை. மாவட்ட கியுடெக் நிறுவன இயக்குநர் அருட்திரு ஜீ.பீற்றர் அடிகளார் இதில் பிரதம விருந்தினராக கலந்து கொள்வார். (கா)

## பொன்னம்பலம் மருத்துவமனையில் 'கற்றாக்' சத்திரசிகிச்சை

யாழ். போதனா மருத்துவமனையில் சேவையாற்றும் கண் சத்திர சிகிச்சை நிபுணர் சிவந்தா அவர்களினால் எதிர்வரும் 09.07.04 அன்று கற்றாக் சத்திரசிகிச்சை புதுக்குடியிருப்பிலுள்ள டாக்டர் பொன்னம்பலம் ஞாபகார்த்த மருத்துவமனையில் மேற்கொள்ளப்படவுள்ளது.

தெரிவு செய்யப்படுவோருக்கு மட்டுமே சத்திரசிகிச்சை மேற்கொள்ளப்படவுள்ளதால் பயன்பெற விரும்புவோர் தங்களைக் காட்டி 09ஆம் திகதி வரையும் பதிவினை உறுதிப்படுத்திக் கொள்ளவும். காலை 8.00-பி.ப 2.00 மணி வரையும் பதிவுகள் மேற்கொள்ளப்படும்.

கற்றாக் சத்திரசிகிச்சைக்கு பாவிக்கப்படும் வில்லைகளுக்குரிய கட்டணம் மட்டுமே பெற்றுக் கொள்ளப்படும். (08)

## மன்னார் மின்விநியோகத்தில் சீர்கேடு மக்கள் முறையிட்டும் பயனில்லை

(மன்னார்)

மன்னாரில் உள்ள தெருக்களில் உள்ள மின் விளக்குகள் ஒரு வாரகாலமாக ஒளிரவில்லை.

இதனால் திருடர்கள் தமது கைவரிசையைக் காட்டுவது அதிகாமாகியுள்ளது.

பொது மக்களின் வீடுகளில் உள்ள சீமெந்துப் பைக்கற்றுக்கள், வாழைக்குலைகள், தேங்காய்கள், பூச்சாடிகள், கதிரைகள் என்பன களவாடப்பட்டுள்ளன.

அத்துடன் தனியார் வைத்தியசாலைகள், கல்வி நிலையங்கள் என்பவற்றின் முன்னாலுள்ள மின் விளக்குகளில் போதிய வெளிச்சம் இன்மையால் நோயாளர்கள், மாணவ மாணவிகள் பெரிதும் கஷ்ர முறுகின்றனர்.

இது குறித்து மன்னார் மின்சார சபையிடம் முறையிடப்பட்ட போதும் உரிய நடவடிக்கை ஏதும் எடுக்கப்படவில்லையெனத் தெரிவிக்கப்படுகிறது. (மி)

## வெளிநாட்டுக்கு புலம்பெயர மகேஸ்வரன் தீர்மானம்

முன்னாள் இந்து கலாசார அமைச்சர் தி.மகேஸ்வரன் தமது குடும்பத்துடன் வெளிநாடு ஒன்றுக்குப் புலம் பெயரப் போவதாக அறிவித்துள்ளார். கடந்த 3 மாதகாலமாக தமது வீட்டுக்கு வந்த இனந்தெரியாத ஒருவர் தம்மைப் பற்றித் தகவல் சேகரித்து வந்ததாக மகேஸ்வரன் குறிப்பிட்டுள்ளார். இதனை அடுத்து தாம் அரசாங்கத்திடம் பாதுகாப்பைக் கோரிய போதும் இதுவரை உரிய பதில் எதனையும் அரசாங்கம் வழங்கவில்லை. தமது வீட்டுக்கு வந்து தம்மைப்பற்றித் தகவல் சேகரித்தவர் தமிழீழ விடுதலைப்புலிகளின் புலனாய்வு உறுப்பினர் என பொலிசார் கூறுகின்றபோதும், தமிழீழ விடுதலைப்புலிகள் தமக்கு மரண அச்சுறுத்தல் விடுக்க எவ்வித காரணமுமில்லை என மகேஸ்வரன் குறிப்பிட்டுள்ளார். (32)

### அரச செலவில் சடலம் அடக்கம்

(மன்னார்)

கடந்த 26ஆம் திகதி மன்னார் பஸ் நிலையத்தில் மரணமான 33வயதுடைய பாலசுப்பிரமணியம் சித்திரா என்ற பெண்ணின் உடலை உறவினர் எவரும் வந்து பொறுப்பேற்காத காரணத்தினால் நேற்று முன்தினம் மன்னார் நீதிபதி அப்பகுதி கிராம சேவையாளர் மூலம் அவ்வுடலை அரச செலவில் அடக்கம் செய்யுமாறு உத்தரவிட்டுள்ளார். இதன்படி பிற்பகல் 3.30 மணியளவில் மன்னார் பொது மயானத்தில் அவ்வுடல அடக்கம்செய்யப்பட்டது (மி)

## சிறப்புற நிறைவெய்திய கரும்புலிகள் நாள் விளையாட்டுப்போட்டி

(அலுவலக செய்தியாளர்)

கரும்புலிகள் தினத்தையொட்டி முல்லை.மாவட்ட கடற்றொழிலாளர் கூட்டுறவுச்சங்க சமாசமும் அதன் இணை நிறுவனங்களும் இணைந்து தமிழீழ விளையாட்டுத் துறையின் ஆதரவுடன் நடத்திவந்த கரும்புலிகள் நாள் விளையாட்டுப் போட்டியின் இறுதிப் போட்டிகள் நேற்று முன்தினம் வெகு சிறப்பாக நடந்து முடிந்துள்ளது.

முல்லைத்தீவில் அமைந்துள்ள சுற்றுலா மையத்தில் நேற்று முன் தினம் காலை 7.30 மணிக்கு முல்லை.மாவட்டக் கடற்றொழிலாளர் கூட்டுறவுச்சங்கங்களின் சமாசத் தலைவர் மரியராசா தலைமையில் நிகழ்வுகள் ஆரம்பமானது. இந்நிகழ்வில் பொதுச்சுடரினை புலிகளின் குரல் நிறுவனப் பொறுப்பாளர் தமிழன்பன் ஏற்றினார். தமிழீழ தேசியக்கொடியைக் கொள்கை முன்னெடுப்புப்பிரிவுப் பொறுப்பாளர் றமேஸ் ஏற்றினார். மைதானத்தில் வைக்கப்பட்டிருந்த கரும்புலிகளின் பொது உருவப்படத்திற்கு மூன்று மாவீரர்களின் தந்தையாரான சிவகுரு சுடர் ஏற்றி மலர்மாலை அணிவித்தார்.

முதல் போட்டியாகக் கடல் நீச்சல் ஆரம்பானது. அளம்பில் இளந்தென்றல் விளையாட்டுக் கழகத்தைச் சேர்ந்த பொ.ஜெகிந்தன் முதலாமிடத்தைப் பெற்றுக் கொண்டார்.

அடுத்த போட்டியாக 15 குதிரை வலு (சைற்கியர்) கொண்ட படகோட்டப்போட்டி ஆரம்பமானது. இரணைப்பாலை சென் அன்ரனீஸ் விளையாட்டுக்கழகத்தைச் சேர்ந்த ம.டென்சில் முதலிடத்தைப் பெற்றார். அடுத்ததாக சுகிக்கி 15 குதிரைவலு கொண்ட படகோட்டப் போட்டி நடைபெற்றது. முதலாமிடத்தை வண்ணாங்குளத்தைச் சேர்ந்த சின்னவன் அணி பெற்றுக் கொண்டது.

அடுத்து 15 குதிரை வலு கொண்ட யமகா இயந்திரம் பொருந்திய (முன்கியர்) இயந்திரப் படகுப்போட்டி இடம்பெற்றது. முதலாமிடத்தை முல்லை.ஒற்றுமை அணியைச் சேர்ந்த குலேந்திரன் அணி பெற்றுகொண்டது.

போட்டிகள்யாவும் நிறைவடைந்ததைத் தொடர்ந்து கடலில் கடற்கரும்புலிப்படகுகளும், கடற்புலிகளின் தாக்குதல் படகுகளும் வீரசாகசங்களை நிகழ்த்திக் காட்டின. இதனைத்தொடர்ந்து நிகழ்வுகள் யாவும் பிற்பகல் 1.45 மணியளவில் நிறைவடைந்தன.

பிற்பகல் 6.00 மணிக்கு முல்லைத்தீவு மகாவித்தியாலய மைதானத்தில் நடைபெற்ற கரும்புலிகள் நாள் எழுச்சி நிகழ்வில் கடல்நீச்சல், படகோட்டம் போன்ற போட்டிகளில் வெற்றிபெற்றவர்களுக்கும் முதலாம் நாள் நடைபெற்ற தலையணைச் சண்டை போட்டியில் வெற்றிபெற்ற வீர வீராங்கனைகளுக்கான பரிசில்களும் வழங்கிக் கௌரவிக்கப்பட்டன.

மேற்படி பரிசில்களை கடற்புலிகளின் துணைத்தளபதி செழியன், கடற்புலிகளின் முல்லை.மாவட்ட அரசியல் துறைப்பொறுப்பாளர் றங்கன் உள்ளிட்டோர் வழங்கிக் கௌரவித்தனர். இந்நிகழ்வில் கடற்புலிகளின் சிறப்புத் தளபதி கேணல் சூசை உட்பட பெருமளவான போராளிகள், பொதுமக்கள் எனப் பல்லாயிரக் கணக்கானவர்கள் கலந்துகொண்டனர்.

இதேவேளை கரும்புலிகள் நினைவாக வடமராட்சி கிழக்கில் மாபெரும் கடல், தரை விளையாட்டுக்கள் கடற்புலிகளும மற்றும் வடமராட்சி கிழக்கு விளையாட்டு ஒன்றியமும் இணைந்து நடாத்தின.

ஆண்களுக்கான 5கிலோமீற்றர் நீச்சல்போட்டியில் முதலாமிடத்தை ஆழியவளை அருணோதயா விளையாட்டுக் கழகத்தைச் சேர்ந்த அ.காந்தஸ்வரன் பெற்றார்.

பெண்களுக்கான நீச்சல் போட்டியில் 1ஆம் இடத்தினை தாளையடி புனித அந்தோனியார் விளையாட்டுக் கழகத்தைச் சேர்ந்த சே.காயத்திரி பெற்றுக் கொண்டார்.


ஆண்களுக்கான கட்டுமரம் வலித்தல் போட்டியில் 1ஆம் இடத்தை ஆழியவளை அருணோதயா விளையாட்டுக் கழத்தைச் சேர்ந்த இ. மோகனதாஸ் பெற்றுக் கொண்டார்.


கடல் நீச்சல் அஞ்சல் போட்டியில் 1ஆம் இடத்தினை கட்டைக்காடு சென்மேரிஸ் விளையாட்டுக் கழகம் பெற்றுக் கொண்டது.

இப்போட்டிகளை கடற்புலிகளின் தாக்குதல் அணித் தளபதி மங்களேஸ் ஆரம்பித்து வைத்தார். 11 கழகங்கள் பங்கு பற்றின.

தரைப் போட்டிகளில் மேலும் ஆண்களுக்கான 15கி.மீ மரதனோட்டப் போட்டியில் 1ஆம் இடத்தினை ஆழியவளை அருணோதயா விளையாட்டுக் கழகத்தைச் சேர்ந்த லோ.காங்கையன் பெற்றுக் கொண்டார்.

(லோ,ச,20,11)










படங்கள்:- அ.லோகீசன்

# புலிகளின் இராணுவ அரசியல் பலத்தினூடாகவே தமிழர் சுதந்திர வாழ்வை அடைய முடியும்

## -பாராளுமன்ற உறுப்பினர் கஜேந்திரன்

(யாழ்ப்பாணம்)

**"தமிழ் மக்கள் தமது சுதந்திரமான வாழ்வை தமிழீழ விடுதலைப் புலிகளின் இராணுவ, அரசியற்பலத்தின் ஊடாகவே அடைய முடியும். நாம் இன்று சந்தோசமாகவும், கௌரவமாகவும் இருப்பதற்கு காரணமானவர்கள் கரும்புலிகளே. எமது மண் எத்தனையோ கல்விமான்களை உருவாக்கியுள்ள போதிலும் அவர்களால் எமது மக்களின் உரிமைகளை மீட்டுக்கொடுக்க முடியாமல் போனது. அதனை செய்து காட்டியவர்கள் கரும்புலிகளே"**

இவ்வாறு நேற்றுக் கரும்புலிகள் நாளையொட்டி நடாத்தப்பட்ட கவிதை, சிறுகதைப்போட்டிகளில் வெற்றி பெற்றோர்களுக்கான பரிசில் வழங்கல் நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றிய தமிழ்த்தேசியக்கூட்டமைப்பின் யாழ் மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் எஸ்.கஜேந்திரன் தெரிவித்துள்ளார்.

சர்வதேச தமிழீழ மாணவர் பேரவையில் அதன் தலைவர் பகீரதன் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் பொது ஈகச்சுடரை யாழ். பல்கலைக்கழக துணைவேந்தர் எஸ்.மோகனதாஸ், கலைப்பீடாதிபதி கோபால கிருஷ்ண ஐயர் ஆகியோர் ஏற்றினர்

கரும்புலிகளின் திருவுருவப் படத்திற்கான ஈகச்சுடரை சிரேஷ்ட விரிவுரையாளர் கணேசலிங்கம் ஏற்றினார்கள்.

பிரதம விருந்தினரான பேராசிரியர் மோகனதாஸ், சிறப்புவிருந்தினரான யாழ்.மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் சி.இளம்பருதி, பாராளுமன்ற உறுப்பினர்களான கஜேந்திரன், திருமதி பத்மினி சிதம்பரநாதன், யாழ்.பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத் தலைவர் செல்வக்குமார் ஆகியோரின் சிறப்புரைகளுடன் இறுதியில் பரிசில் வழங்கல் இடம்பெற்றது. (33)

# கிராம உத்தியோகத்தர்களின் ஆற்றலை மேம்படுத்த பயிற்சி வகுப்புக்கள் யாழ்ப்பாணச் செயலகத்தில்

வடக்கு- கிழக்கு அவசர புனரமைப்பு நிகழ்ச்சித் திட்டத்தின் நிதியுதவியுடன் கிராம உத்தியோகத்தர்களுக்கான செயற்பாடுகளை மேம்படுத்துவதற்கான பயிற்சி வகுப்புக்கள் யாழ்.செயலகத்தில் 10.07.2004., 11.07.2004 ஆகிய இரு நாட்கள் இடம்பெறவுள்ளன. இந்த நிகழ்ச்சிக்கு திரு.செ.பத்மநாதன் அரசாங்கஅதிபர், திரு.கு.ஞானசேகரன் உதவித்திட்டப் பணிப்பாளர், ஆ.சிவசுவாமி மேலதிக அரசாங்க அதிபர், வ.சத்தியசீலன் உதவித் திட்டப் பணிப்பாளர், வே.வீரபத்திரப்பிள்ளை உ.அ. அதிபர், வீ.பத்மநாதன் உதவி மோட்டார் போக்குவரத்து ஆணையாளர், திரு.கதிர்காமநாதன் பிரதமஎழுதுனர், திருமதி குமுதினி வசந்தரூபா பிரதேசசூழல் உத்தியோகத்தர், திருமதி. சி.சத்தியகுமார் மாவட்ட சூழல் உத்தியோகத்தர், திரு.எம்.பிரபாகரன் பிராந்திய வனவள உத்தியோகத்தர் ஆகியோர் தலைமையில் அமர்வுகள் இடம்பெறவுள்ளன. இந்தப் பயிற்சித் திட்டத்திற்கு யாழ்.மாவட்டத்திலிருந்து ஒரு தொகுதி கிராம உத்தியோகத்தர்கள் கலந்து கொள்ள அழைக்கப்பட்டுள்ளனர். (28)

### - யாழ். அளவெட்டியில் -

# கோவில் திருவிழாவில் இளைஞர்கள் வெடிகொழுத்தி ஆரவாரம்

(யாழ்ப்பாணம்)

அளவெட்டி பெருமாக் கடவைப் பிள்ளையார். கோவில் பூங்காவனத் திருவிழாவின் போது சுவாமி வெளிவீதி உலா வரும் போது இளைஞர்கள் சிலர் சீனா வெடிகளைக் கொழுத்தி ஆரவாரம் புரிந்துள்ளனர்.

இதனால் பாதிப்படைந்த கோவில் வீதியில் உள்ள ஒருவர் தெல்லிப்பளை பொலிஸ்நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளார்.

இதனையடுத்து கோயிலுக்குச் சென்ற பத்துக்கு மேற்பட்ட பொலிசார் இளைஞர்கள் சிலரைக் கைது செய்து விசாரணைக்கு உட்படுத்தியதுடன் சிலரை எச்சரிக்கை செய்ததாகத் தெரிவிக்கப்படுகிறது.

# வெளிநாட்டு பயணிகளால் நிரம்பி வழியும் யாழ் நகரம்

யாழ்நகரப்பகுதி கடந்த சில நாட்களாக வெளிநாட்டு சற்றுலா ப் பயணிகளினால் நிரம்பி வழிவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனா ல் யாழ் நகரில் உள்ள சுற்றுலா விடுதிகளும் இடவசதி போதாநிலையில் நிரம்பிவழிவதாக தெரிவிக்கப்படுகிறது.

நயினாதீவு அம்மன் ஆலய திருவிழா மற்றும் மேலைத்தேய நாடுகளில் தற்போது விடுமுறைக்காலம் என்பதனாலும் அங்கு வேலை தேடி சென்றவர்கள் குடும்பம் குடும்பமாக வரத் தொடங்கியுள்ளனர்.

# குன்றும் குழியுமாக யாழ்.கோண்டாவில் வீதி

யாழ்கோண்டாவிலிலுள்ள நந்தவில் வீதி மிக நீண்டகாலமாகப் புனரமைப்புக்கள் ஏதுமின்றி குன்றும் குழியுமாக இருப்பதால் இவ்வீதியூடாகப் பயணிக்கும் மக்கள் பெரும் சிரமங்களை அனுபவித்து வருகின்றனர்.

இவ்வீதியின் நிலை குறித்து பலதரப்பினரிடமும் முறையிட்டும் உரிய நடவடிக்கைகள் எடுக்கப்படாததால் மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

இதேவேளை இவ்வீதியின் சீரற்றதன்மை காரணமாக அடிக்கடி இதில வீதி விபத்துக்கள் ஏற்பட்டுவருகின்றமையும் குறிப்பிடத்தக்கது. (33)


# சட்டவிரோத மதுபானம், போதைப்பொருள் விற்பனைசெய்த 205பேர் கடந்த ஆறு மாதத்தில் குடாநாட்டில் கைது

யாழ்.குடாநாட்டில் அண்மைக் காலமாக சட்டவிரோதமாக மதுபானம் மற்றும் போதைப் பொருட்களை விற்பனை செய்வோர் தொகை அதிகரித்து வருவதாக யாழ்நீதிமன்ற வட்டாரத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

அந்தவகையில் கடந்த ஜுன் மாதத்துடன் முடிவடைந்த 6மாத காலத்துள் யாழ்.குடாநாட்டில் சட்டவிரோதமாக மதுபானம் மற்றும் போதைப் பொருட்களை விற்பனை செய்த 205பேர் மதுவரித்திணைக்களத் தினரால் கைதுசெய்யப்பட்டு நீதிமன்றத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளனர். இவ்வாறு கைது செய்யப்பட்டவர்கள் கசிப்பு, சட்டவிரோத மதுபான வகைகள், கஞ்சா போன்ற சட்டவிரோத மதுபான மற்றும் போதைப்பொருட்களை விற்பனை செய்தவர்களெனத் தெரியவருகிறது.

எனினும் குடாநாட்டிலுள்ள பல பகுதிகளிலும் தற்பொழுதும் இவ்வாறான சட்டவிரோத மது மற்றும் போதைப்பொருள் விற்பனைகள் தொடரப்பட்டு வருவதாகவும் தெரியவருகிறது. (33)

## 82 வது கூட்டுறவு தினவிழாச்செய்தி



கிளிநொச்சி- மாவட்ட கூட்டுறவுச்சபை 82 ஆவது சர்வ தேச கூட்டுறவுத்தினத்தை கொண்டாடுவதையிட்டு இத் திணைக்களம் மிக மகிழ்கிறது. சர்வதேசத்தின் ஒரு வாழ்வு நெறி தனது நூற்றாண்டுக்கு மேலான சுவட்டினை மீள நினைவுகூரும் போது அது அவ் வாழ்நெறி மக்களின் நெருக்கமான பற்றுதலுக்கும் நெருக்கடிகளின் போது அபயம் தரும் மார்க்கமாய் இருந்தது என்பதில் பெருமையும் நன்றியும் இதயத்திற்குக் கிட்டுகிறது என்பதே உயரக்கூவி விடுக்கப்படும் செய்தியாகும். மானிடம் தன்வளர்பாதையில் மிருக உணர்வுகளில் இருந்து விடுபட்டு தானும் தன்குழாமும் என்ற எல்லைகளையும் தாண்டி அனைத்துலக மானிடவர்க்கத்தினுள் ஒரு பொதுவான இலட்சனத்தையும் பெருமைக்குரிய பாரம்பரியத்தையும் சொந்தம் கொண்டாடுவதற்கு கூட்டுறவு இயக்கம் முழுமையான தகைமையை உருத்தாக்கியுள்ளது.

இந்தநாளில் கூட்டுறவாளர்கள் என்ற வகையில் காலதேசவர்தகமானங்களுக்கு கட்டுப்படாத எமது பண்பார்ந்ததும் பொருத்தமானதுமான செயல்நெறியை மீளவும் செப்பனிடுவதோடு இந்த மண்ணில் இவ்வியக்கம் கல்லியெறிய முடியாத நெடிய படர்ந்திறுகிய வேர்களைக் கொண்டதென்பதை வெளிப்படையான பரிமானவளர்ச்சிமூலம் நாம் நிருபிப்பதே சர்வதேச கூட்டுறவு தினத்தின் சங்கற்பமாகக் கொள்வோமாக.

இ.இளங்கோவன்
கூட்டுறவு அபிவிருத்தி
ஆணையாளரும் கூட்டுறவு சங்கங்களின் பதிவாளரும் (வகி)

# ஆசிச்செய்தி



82 ஆவது சர்வதேச கூட்டுறவாளர் தினத்தை முன்னிட்டு கிளிநொச்சி மாவட்டத்தில் 2004 யூலை மாதத்தில் நடைபெறும் கூட்டுறவாளர் தினவிழாவிற்கு ஆசிச்செய்தி வழங்குவதில் பெரு மகிழ்ச்சி அடைகிறேன்.

நலிவுற்ற சமுதாயத்தின் அடிப்படைத் தேவைகளைக் கூட்டுறவுக்கொள்கைகளுக்கமைய நிவர்த்தி செய்வதற்குப் பனை, தென்னைவள அபிவிருத்திக் கூட்டுறவுச்சங்கங்களும், பலநோ.கூ. சங்கங்களும் ஏனைய வகைக் கூட்டுறவுச்சங்கங்களும் தமது செயற்பாடுகளை எந்நேரத்திலும் தீவிரமாக முன்னெடுத்துச் செயலாற்றுவதை இந்நேரத்தில் பாராட்டுவது மிகப் பொருத்தமானதாகும்.

கிளிநொச்சி மாவட்டத்தில் கூட்டுறவு விழுமியங்களின் வெற்றிக்கு தம்மை முழுமையாக அர்ப்பணித்த கௌரவ தலைவர்கள், பணிப்பாளர்கள், பணியாளர்கள், கூட்டுறவாளர்கள் ஆகியோர் தமது சேவையினை கூட்டுறவே நாட்டுயர்வு" என்பதற்கமைய தொடர்ந்தும் ஆற்றவேண்டும் என வாழ்த்துகின்றேன்.

**எ.சின்னத்தம்பி,**
**கூ.அ.உ.ஆணையாளர்,.ப.தெ.வளப்பிரிவு**
**வன்னிப் பிராந்தியம்,**
**கிளிநொச்சி.**

* **வரவேற்புரை.**

திரு.மா.நடராசா அவர்கள், தலைவர்,கிளி/மாவட்ட கூட்டுறவு சங்கங்களின் ஒன்றியம், தலைவர், கரைச்சி வடக்கு ப.நோ.கூ.சங்கம்.

* **தலைமையுரை,**

*பேச்சுப் போட்டியில் வெற்றி பெற்ற மாணவர் உரை,

செல்வன்.சி.பிரசாத், கிளி/முருகானந்தா ம.வி.

செல்வன்.தி.சிறீரஜீவன், கிளி/இந்துக்கல்லாரி.

* **கூட்டுறவாளர் உரை.**

திரு.வை.குகராசா -கிளி/முல்லை கிராமிய வங்கி சமாச தலைவரும், கரைச்சி தெற்கு ப.நோ.கூ.சங்க தலைவரும்.

திரு.த. சிவயோகராசா -தலைவர், வடமாகாண பனை, தென்னைவள கூட்டுறவு சங்கங்களின் பேரிணையம், தலைவர் கிளி/ப.தெ.வ.அ.கூ.சங்கம்.

திரு.க. செல்வராசா -கரைச்சி வடக்கு ப.நோ.கூ.சங்க பொதுமுகாமையாளரும், கிளி/சி.க.கூ.சமாச தலைவரும். திருமதி. யோ.சத்தியலீலா பொது முகாமையாளர் பளை,பல.நோ.கூ.சங்கம்

* சிறப்பு விருந்தினர் உரை.

* முதன்மை விருந்தினர் உரை.

* பரிசில்கள் வழங்கல் - விருந்தினர்கள்.

**கலைநிகழ்ச்சிகள்:-**

நடனநிகழ்ச்சி

ஆலடி விநாயகர் மகளிர் சி.க.வகூ.சங்கம்.

இராமநாதபுரம் சக்தி சி.க.வ.கூ.சங்கம்.

செந்தாமரை யூனியன் குளம் சி.க.வ.கூ.சங்கம்

கிளிநொச்சி மத்திய கல்லாரி.

கரைச்சி கிழக்கு பல.நோ. கூ. சங்கம்.

* பட்டிமன்றம்.

* இசைநிகழ்ச்சி.-

* சிறப்பு நிகழ்வு -நாடகம் (பளை,ப.தெ.வ.அ.கூ. சங்கம்)

* நன்றியுரை -திரு.க.சிவகுமார் (செயலாளர், கிளி/மாவட்ட கூட்டுறவுச்சபை.)

"அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்."

# 82 ஆவது கூட்டுறவு தினவிழா ஆசிச்செய்தி



மக்களின் சமூக, கலாசார பொருளாதார மேம்பாட்டுக்காக கூட்டுறவின் மகிமையை உணர்ந்து அதன் கொள்கைகள், கோட்பாடுகள் சித்தாந்தங்களின் அடிப்படையில் கூட்டுறவின்பால் உணர்வையும், அறிவையும் வளர்ச்சியடையச் செய்யும் நோக்கில் 82ஆவது கூட்டுறவுதின விழா கிளிநொச்சி மாவட்டத்தில் சிறப்பாக நடைபெறுவதையிட்டு வாழ்த்துவதில் மகிழ்ச்சியடைகின்றேன்.

மக்கள் மத்தியில் ஆக்கபூர்வமான அறிவூட்டல்களை வழங்கவல்ல தமிழ் மொழியிலான கூட்டுறவு தொடர்புடைய நூல்கள், சஞ்சிகைகள் இல்லையே என்ற தன்மையையும்,மக்கள் மத்தியில் கூட்டுறவு மனப்பாங்கை அறியச்செய்யவும்- காலத்தின் தேவை கருதி விழா நினைவு கூர்வதற்கு ஓர் சந்தர்ப்பமாகக் கருதுகின்றேன்.

பல்துறை சார்ந்த கூட்டுறவு அமைப்புக்கள், நிறுவனங்களின் கடந்தகால சேவையினையும்,எதிர்கால சேவைகளையும் கூட்டுறவுக் கொள்கைகளுக்கமைய மக்களின் வாழ்க்கை சுபீட்சத்திற்கு நல்லன செய்யவும், நானிலம் காக்கவும் அரிய சாதனைகளை நிறுவனங்கள் ஈட்ட பாராட்டி ஆசி கூறுகின்றேன்.

**த. கந்தசாமி**
**கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர்,**
**கிளிநொச்சி.**

(சி:10004)

# ஆதவனின் அனுபவப் பகிர்வுகள்

என் அன்பு வாசக நெஞ்சங்களே..! தூய்மையான அந்த அப்பிள் மரம் பாவம்.கடைசிவரை தன் நண்பனை மறக்கவில்லை. எல்லாவற்றையும்... எதிர்ப்பில்லாமல் கொடுக்கின்ற ஒரு ஜீவன்.அது இந்த உலகில் நான் விரும்புகின்ற உறவு நட்புத்தான். என்னால் மிகவும் ரசிக்கப்பட்ட பாடலின் முதல் அடி;

"தோழா... தோழா... தோள்கொடு கொஞ்சம் சாஞ்சுக்கணும்...."

(இந்த அடிமட்டும் பிடித்திருந்தது; ஏனைய அடிகள் சுத்த சொதப்பல்)

தோழமை... நட்பு ... இந்த உறவுகள் தான் நிலையானவை.

* * * * * *

சரி விசயத்துக்கு வருகிறேன். எனது நாடகத்தில் நடித்த வெள்ளைச் சிறார்கள் புன்னகையுடனும் முகத்தில் உற்சாகத்துடனும் இருந்ததை புகைப்படத்தில் பார்த்தீர்கள்.

"அபிவிருத்தி அடைந்த நாட்டின் சிறார்கள் சந்தோசமாகத்தானே இருப்பார்கள், இங்கு நாட்டு நிலைமை மோசம்; இங்கு ஆரோக்கியமில்லை; போசாக்கு குறைந்த பிள்ளைகளே உள்ளனர்; அவர்கள் முகத்தில் புன்னகை எப்படிவரும்? " என்று பலர் கேட்கலாம்; அவர்களுக்கு நான் சொல்லும் பதில் இதுதான் " குழந்தைகள் என்றும் குழந்தைகள் தான் பெரிய மனிதர்களின் சிறிய உருவங்கள்அல்ல அவர்கள். அவர்கள் உள்ளமும் சிறியது. அப்பழுக்கில்லாதது" என்பதுதான். குழந்தைகள் எப்போதும் கொஞ்சிச் சிரிப்பனவே! என்ற தொடரில் வெள்ளைச் சிறார்களுடன் நான் இயக்கிய "அப்பிள்மரம்" நாடகத்தைப் பற்றி குறிப்பிட்டிருந்தேன். பலருக்கு அந்த அப்பிள் மரத்தின் மேல் எரிச்சல்தான் வந்தது. இப்படியா எல்லாவற்றையும் பிரதியுபகாரம் இல்லாமல் கொடுக்கமுடியும் என்று கேட்டார்கள்.இவர்களுக்கு அந்தநட்பு, அந்தக்காதல், அந்தப்பரிவு, அந்த நேசம், அந்தக் கருணை, அந்த ஈடுபாடு, அந்தப் பெருமூச்சு... இவை விளங்கவே இல்லை.

நான் சொல்லவருவது எல்லாம் இதுதான்; தற்போது நாம் வாழ்ந்து கொண்டிருக்கும் சமூகம் ஒரு "பயன்படுத்தும்" சமூகம். இதை ஆங்கிலத்தில் "கொன்சுமெர் சொசைட்டி" (Consumer society) என்றழைப்பார்கள். அதாவது பயன்பாடும், நுகர்வும் இல்லாமல் இந்த சமூகத்தில் யாரும் யாருடனும் உறவு கொள்வதில்லை. எல்லோரும் சுயநலத்தின் மொத்த உருவங்கள் ஆகிவிட்டார்கள் .இந்த Consumer society ஐப் பற்றிய ஒரு விளக்கமாக அண்மையில் பேராதனை பல்கலைக்கழக மாணவர்களை வைத்து கொழும்பு தமிழ் சங்கத்தில் "உணர்வுகள் விற்பனைக்கல்ல" (Feelings not for sale) என்ற நாடகத்தை தயாரித்து மேடையேற்றினேன்.

இப்படித்தான் எங்கள் சமூகம் இயங்கிக் கொண்டிருக்கிறது.ஆனால் அப்பழுக்கில்லாத, சுயநலமில்லாத அப்பிள் மரமும் அதேநேரத்தில் மற்றவனுக்கு சிறிய இடத்தைக்கூடத் தராது... புழுத்துநாறும் காலுறைகளைக் கொண்ட மணியத்துடனும் தான் நாம் வாழவேண்டி இருக்கிறது.

இங்கே எமக்கொரு தெரிவு வலிந்து வேண்டப்படுகிறது.

* * * * * *

ஒரு நாள்...

நான் SAS விமானத்தில் SPAIN நாட்டை நோக்கிப் பறந்து கொண்டிருந்தேன். அது ஒரு பெரிய விமானம். கோடைகால விடுமுறையாதலால் பெருமளவிலான சுற்றுலாப் பயணிகள் பயணித்துக் கொண்டிருந்தார்கள்.

பணக்காரர்களும், ஏழைகள் கூட "ஒரு சுற்றுலா நாங்கள் போய்விட்டோம்" என்ற அந்தஸ்துக்காகவும் , முதியவர்களும், குடும்பங்களுமாய் அந்த விமானம் நிறைந்திருந்தது.

"நாங்கள் இப்பொழுது அத்திலாந்திக் சமுத்திரத்தின் மேல் பறந்து கொண்டிருந்தோம்; உங்கள் இடது பக்கத்தில் நீங்கள் காண்பது TENNERIF என்கின்ற... பல்லாயிரம் ஆண்டுகள் முன்னர் வெடித்துச் சிதறிய ஒரு எரிமலைக் குழம்பு" என அறிவித்தார் அந்த விமான ஓட்டி. நானும் பார்க்கிறேன். எல்லோரும் எட்டிப்பார்க்கிறார்கள் .

இப்பொழுது -

என் மனதில் ஒரு அதீத கற்பனை ஓடியது. அந்த எரிமலைக் குழம்பு... இப்பொழுது மீண்டும் மாபெரும் சக்தியுடன் வெடித்துச் சிதறிவிட்டால் என்ன நடக்கும்...?

எங்கள் அந்தஸ்திற்கும், பணக்கார நடவடிக்கைகளுக்கும் ,ஒருவர் மேல் ஒருவர் கொள்ளும் பொறாமைகளுக்கும், எங்கள் நிறைவேறாத ஆசைகளுக்கும், காலத்துக்கு காலம் நீங்கள் போற்றிவைத்திருந்த நம்பிக்கைகளுக்கும்... ஒரு கோள்விக்குறி வந்துவிடுமல்லவா...?

இந்தக் கேள்விக்குறி பற்றி தெரியாமலேயே சினிமா நடிகர்களும்... தோட்டத் தொழிலாளர்களும்.... சுய நலமில்லாத அப்பிள்மரமும்...

காலுறை மணக்கும் சுயநலவாதி மணியமும்....வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள்.

* * * * * *

விமானம் பறந்துகொண்டிருக்கிறது. கப்டன் சொல்லிக் கொண்டிருக்கிறார்.

" உங்கள் சீற் பெல்டுகளை சீராக அணியுங்கள்! அத்திலாந்திக் வான்வெளியில் காலநிலை பிசகி விட்டது. விமானம் திசை தவறிப்போவதற்கான வாய்ப்புக்கள் உண்டு. எந்த நேரமும் எதுவும் நடப்பதற்கான சாத்தியக் கூறுகள் தென்படுகின்றன.

"உங்கள் சீற்களுக்கு கீழே 'பரசூட்' கள் இருக்கின்றன. அதிக நோய்வாய்ப்பட்ட நோயாளிகள் உங்களுக்கான அடிப்படை மருந்துகளை விழுங்குங்கள்; கடவுளைப்பிரார்த்தியுங்கள்!" என்று தொடர்ச்சியாக சொல்லிக் கொண்டே இருந்தார் கப்டன்.

சனங்கள் புலம்பினார்கள்... பயந்தார்கள்... யன்னலினூடாக எட்டிப் பார்த்தார்கள்... விமானப் பணிப்பெண்கள் அங்கும் இங்கும் ஓடி உதவி செய்து கொண்டிருந்தார்கள்

பீதி....

பயம்..

வாழ்க்கையின் நிலையாமை....

அதிர்ச்சி....

எதிர்பார்ப்பின்மை...... இதயத்துடிப்பு எல்லோருக்குமே அதிகரித்தது.

எங்கள் விமானம் குலுங்க ஆரம்பித்தது. விமானம் ஆடிஆடி வேறு வேறு திசையில் பறக்கத்தொடங்கியது. தனது நேரான திசையைத் தேடிப்பறக்க வெகுவாகக் கஷ்ரப்பட்டது.

"ஒக்சிசன்" வாயு இல்லாதவர்கள் தும்ம ஆரம்பித்தார்கள். ஒருவராலும் தமது புயத்தை....தமது இருப்பை... நியாயப்படுத்தவோ அல்லதுவாதிக்கவோ முடிந்திருக்கவில்லை அதற்கான அவகாசமோ இருக்கவில்லை.

உண்மையிலேயே என்ன செய்யலாம்? எனது இருப்புத் தவிர மற்றவர்களின் இருப்புப் பற்றிய விமர்சனங்கள் அழிந்து போயிற்று .ஏனோ..... எனக்கு இந்த நிலை பிடித்திருந்தது. எல்லா மனிதர்களும் தமது நிறம்,. தமது சாதி,தமது மதம், தமது அந்தஸ்து, தமது கொள்கைகள் எல்லாவற்றையும் மறந்து....தாம் வாழ வேண்டுமென்று நினைத்தார்கள். மரணபயம் எல்லோரையும் ஆட்டுவித்தது. மரணபயம் என்று வந்தவுடன் எல்லா ஆணவங்களும் அழிந்து போகின்றன. வேறுபாடுகள் இல்லாது போகிறது. ஒரு சின்னக்காணிச் சண்டைக்காக... எவ்வளவு வெட்டுக் குத்துகள்..... ஒரு சின்னஅந்தஸ்துப் பிரச்சினைக்காக எவ்வளவு அணுகுண்டுப் பரிசோதனைகள்.

இப்பொழுது ஒரு அதிசயம் நடந்தது. எனது காலடியின் கீழ்...பாதி கடிக்கப்பட்ட நிலையில் ஒரு அப்பிட்பழம் உருண்டு வந்தது. அந்த அப்பிட்பழத்தைத் துரத்திக் கொண்டு இரண்டரை வயது இளம் வெள்ளை மழலை ஓடி வந்தது. அந்த மழலையைத் துரத்திக்கொண்டு அதன் தாயும் ஓடி வந்தாள். நான் முதலில் பாதி கடிக்கப்பட்டிருந்த அந்த அப்பிட்பழத்தை எடுத்து அந்த மழலையின் கைகளில் சேர்த்தேன். விமானமோ அல்லோல கல்லோலப்பட்டது. எத்தருணத்திலும் உயிர் போகலாம்.

அந்த மழலையின் தாய் தன்மழலையை வாரியணைத்துக் கொண்டாள். என்னைப் பார்த்து "Thank You" என்று சொன்னாள். நான் அவளைப் பார்த்தேன் அவளும் என்னைப்பார்த்தாள் இதயமும் நெஞ்சும் பட படத்தன. எங்கோ பார்த்திருக்கிறோம் என்பதை அவளது நெற்றிச்சுருக்கம் சொல்லிற்று. அவள்தான் முதலில் கேட்டாள்.

"Are You Mr. Adhavan"

"Yes"

"You Are.... MALENA?"

"Yes"

எனது அப்பிள்மர நாடகத்தில் கிளைகள் பாத்திரத்தை அவள்தான் ஏற்று நடித்திருந்தாள். அப்போது அவளுக்கு 11வயது. இப்போது ஒரு மழலையுடன்..!

அப்பொழுது கூட..அந்தப் பாத்திரத்தை ஏற்று அவள் நடிக்கையில் கூட.... அந்த வெள்ளைமழலையின் கண்களை நான் வியந்திருக்கிறேன். மழலை...! தாயாகி.... தாய்க்கொரு மழலை...! இந்த உலகில் ஒரு விடயத்தை நான் உணர்கின்றேன். யாரை எப்போது எங்கே சந்திக்கிறோம்,எப்போது பிரிகிறோம் என்பது எமது கைகளில் இல்லை நான்,

ஒரு சாதாரண மழலைக்கு உதவி செய்யும் நோக்குடன் தான் அதன் கைகளில் அப்பிளைச் சேர்த்தேன். அதைச் செய்ய விளைகையில் விமானப்பணிப் பெண்களிடம் ஏச்சு வாங்கி... விமான ஆட்டங்களிடையே எனது சட்டைப் பையினுள் இருந்த அழகிய விளம்பர அட்டைகள் பறந்துபோய் முன்னாலிருந்த முதியவரின் மூக்கிலடித்து அவரிடமும் ஏச்சுவாங்கி... விமான அசைவில் தடக்குண்டு குப்புறவீழ்ந்து என் நெற்றிப்பொட்டில் சிறிது இரத்தம் கசிந்து... நேருக்கு நேரே கண்கள் பார்த்ததில் தன் கிளைகள் வெட்டப்பட்ட ஒரு அப்பிள் மரமாய்... மலீனாவின் கண்கள் தெரிந்தன. நானும் ஒரு அப்பிள் மரமாய் நிற்பதாக அவள் உணர்ந்திருக்கக் கூடும்.

இந்த Consumer Societyயில் அதுவும் மரணபயத்துடன் எல்லோரும் இருக்கும் நிலையில் சுயநலமும் எதிர்பார்ப்பும் இல்லாத அன்பை, நட்பைப் பொழியும் நாடகத்தை உருவாக்கியவர்கள் வானத்திலே சந்தித்துக் கொண்டதை என் வாழ்நாளில் மறக்க முடியாத அனுபவமாகக் கருதுகிறேன்.

## பகுதி-04

எங்களுக்குப் பேசுவதற்கு ஒரு வார்த்தை தன்னும், சொல்வதற்கு எந்த அவகாசமும் இருந்திருக்கவில்லை. இவையெல்லாமே ஒரு 40 நொடிகளுக்குள் நடந்து முடிந்துவிட்டன. 40 நொடிகளுக்கு ஒரு சரித்திரம்... ஒரு தலைமுறையின் கதை.... நடந்து முடிந்திருக்கிறது.

* * * * * *

எதிர்பார்ப்பில்லாத அன்பினால் இணைந்து கொண்டவர்களுக்கு அழிவில்லை. காலம்கூட அதனை அழிப்பதில்லை. இதனால்தானோ என்னவோ-மரங்களும்... பறவைகளும்... மழலைகளும் மகிழ்வுடன் தமது எதிர்காலம் நோக்கிப் புன்னகையுடனும் உற்சாகத்துடனும் இருக்கிறார்கள்.

(வாசகர்களே மீண்டும் அடுத்த புதன் நாதத்தில் பார்க்கலாமா ......?)

# ரதன் கலையகத்தினரின் தொழில்நுட்ப கலை நுணுக்க கற்கைநெறி ஆரம்ப நிகழ்வு

(கிளிநொச்சி)

தமிழீழ விடுதலைப்புலிகளின் ரதன் கலையகத்தினரின் தொழில்நுட்பக்கலை நுணுக்க கற்கை நெறியின் 1ஆவது அணியினருக்கான ஆரம்ப நிகழ்வுகள் நேற்று முன்தினம் காலை 10.45 மணியளவில் கிளிநொச்சி உருத்திரபுரம் பகுதியில் நடைபெற்றது.

போராளி யாழ்.வீரன் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வின் பொதுச்சுடரினை விடுதலைப் புலிகளின் அதிகார பூர்வ ஏடான "விடுதலைப்புலிகள்" பத்திரிகைப் பொறுப்பாளர் அன்புமணி ஏற்றி வைத்தார்.தமிழீழ தேசியக் கொடியினை தமிழீழதேசியத் தலைவரின் திருமலை மாவட்ட தனிப்பட்ட செயலர் நளன் ஏற்றி வைத்தார்.ஈகச்சுடரினை கலையகத்தின் மூத்தபணியாளர்கள் சி.கைலைநாதன், நா.விக்னேஸ்வரன் ஆகியோர் ஏற்றிவைத்தனர். கரும்புலிகளின் உருவப்படங்களிற்கான மலர் மாலையினை வைத்திய கலாநிதி அஜந்தன், லெப்கேணல் நவம் அறிவுக்கூட பொறுப்பாளர் கலைக்கோன் ஆகியோர் அணிவித்தனர். போராளி யாழ். வீரன் தலைமையில் மைதானத்தில் இடம்பெற்ற அரங்கு நிகழ்வுகளின் வரவேற்புரையினை போராளி யாழ்.வீரன் நிகழ்த்தினார். தலைமைஉரையை தொடர்ந்து ஆசி உரைகளை லெப்கேணல் நவம்அறிவுக்கூட பொறுப்பாளர் கலைக் கோன், வைத்திய கலாநிதி அஜந்தன் ஆகியோர் நிகழ்த்தினர் நன்றி உரையினை ரதன் கலையக பொறுப்பாளர் தே.துளசி நிகழ்த்தினார். இந்நிகழ்வில் துறைசார்ந்த பொறுப்பாளர்கள் போராளிகள், பணியாளர்கள், கற்கையாளர்கள் ஆகியோர் கலந்துகொண்டு சிறப்பித்தனர். (15)

# கருணா விவகாரத்தின் பொறுப்பையும் சனாதிபதியே ஏற்க வேண்டும் –சுரேஸ் பிறேமச்சந்திரன்

தமிழீழ விடுதலைப்புலிகள் அமைப்பிலிருந்து நீக்கப்பட்ட கருணா விவகாரத்தில் சனாதிபதி முழுப்பொறுப்பையும் ஏற்றுச் செயற்பட வேண்டுமென தமிழ்கூட்டமைப்புப் பாராளுமன்ற உறுப்பினர் சுரேஸ் பிரேமச்சந்திரன் வலியுறுத்தியுள்ளார்.கருணா தொடர்பான விவகாரத்தில் படையினருக்கோ, அரசாங்கத்திற்கோ தொடர்புகள் எதுவுமில்லையென சனாதிபதி கூறியிருப்பது முழுப்பூசனிக்காயைச் சோற்றுக்குள் மறைப்பது போலாகும் எனவும்சுரேஸ் பிரேமச்சந்திரன் மேலும் தெரிவித்துள்ளார்.

# இராணுவ ஆக்கிரமிப்பால் ஓரளவு சேதமுற்ற வீடுகள் புனரமைப்பு

சிறிலங்கா இராணுவ ஆக்கிரமிப்பால் ஓரளவு பாதிக்கப்பட்ட நெடுங்கேணி கிராமத்திலுள்ள பதினெட்டு வீடுகளுக்கான சகல திருத்தப்பணிகளும் நிறைவடைந்துள்ளன.

இவ்வேலைத்திட்டத்தினை வவுனியா தமிழர்புனர்வாழ்வுக்கழகம் மேற்கொண்டது. இதற்கான நிதியினை நிக்கொட் நிறுவனம் வழங்கியிருந்தது.

இந்த வீடுகளுக்கு உரியவர்கள் தங்கள் வீடுகளுக்கான திருத்தப்பணிகள் நிறை வடைந்ததால் வீடுகளில் பூரணமாக குடிவந்துள்ளனர். இவர்கள் யுத்த அனர்த்தங்களால் ஏனைய பகுதிகளுக்கு இடம்பெயர்ந்து சென்று வாழ்ந்திருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

# சிதம்பரபுரம் முகாம் முன்பள்ளி மாணவருக்கு ஆடைகள் வழங்கல்

சிதம்பரபுரம் முகாம் முன்பள்ளி மாணவர்களுக்கு தமிழர்புனர் வாழ்வுக்கழகத்தால் உடுபுடவை வழங்கப்பட்டன.

தமிழர்புனர்வாழ்வுக் கழகத்தின் வெளிநாட்டுக் கிளைகளிலிருந்து சேகரிக்கப்பட்ட உடுபுடவைகளே அண்மையில் வழங்கப்பட்டன. இந்நிகழ்வில் வவுனியா தெற்கு வலய முன்பள்ளி இணைப்பாளர் திருமதி சி.அருள்வேல்நாயகி, கணக்காளர் இ.ஜெயநந்தினி, தமிழர் புனர்வாழ்வுக்கழகத்தைச் சேர்ந்த ச.மயூரவதனன் ஆகியோர் கலந்து கொண்டார்கள்.

சிதம்பரபுரம் முகாமில் கிளிநொச்சி, மன்னார், முல்லைத்தீவு மாவட்டங்களைச் சேர்ந்தமக்கள் இடம் பெயர்ந்துவாழ்கின்றமை குறிப்பிடத்தக்கது.

# தமிழர் தாயகத்தில் கரும்புலிகள் நாள்



முல்லையில்...






கடற்புலிகளின் சாகசம்...








நெல்லியடியில்... புதுக்குடியிருப்பில்...







கிளிநொச்சியில்...









வவுனியாவில்... மட்டக்களப்பில்... மாங்குளத்தில்...







## கிளி/மாவட்ட கூட்டுறவு சங்கங்களின் ஆதரவுடன்

# கிளி/ மாவட்ட கூட்டுறவு சபை நடாத்தும்
# 82வது சர்வதேச கூட்டுறவாளர் தினம் - 2004.07.08

## சிறப்பு மலர்

### தமிழீழ நிர்வாகசேவை பொறுப்பாளரின் ஆசிச்செய்தி

நாட்டுயர்வுக்கு கூட்டுறவு என்ற கோட்பாட்டின் அடிப்படையில் பல்லாண்டு காலமாக வட பகுதி மக்கள் கூட்டுறவை கிராமிய, பொருளாதார சமூக அபிவிருத்திக்குப் பயன் படுத்தியமை ஒரு சாதனையாகும்.

விடுதலைப் போராட்டம் ஆரம்பித்த காலத்திலும், போராட்டம் முனைப்படைந்த போதுஏற்பட்ட நெருக்கடியான காலத்திலும் கூட்டுறவுத்துறை தியாக உணர்வுடன் செயற் பட்டமை மகத்தான வரலாற்றுக் கடமையாகும். தனியார் நிறுவனங்கள் இயங்காமல் மூடப்பட்ட போதும் இராணுவ அச்சுறுத்தல்களையும் எதிர்கொண்டு பலவிதமான சிரமங்களின் மத்தியில் அத்தியாவசியப் பொருட்களை மக்களுக்கு வழங்கிய மையைப்பாராட்டாமல் இருக்கமுடியாது. இக்கடமைகளின் போது உயிரிழந்த கூட்டுறவுப் பணியாளர்களை இச்சந்தர்ப்பத்தில் நினைவு கூறுவது வரலாற்றக் கடமையாகும். கடந்த காலத்தில் ஆட்சிசெய்த அரசுகளின் கெடுபிடிகளால் வடக்கு கிழக்குப் பகுதி கூட்டுறவுத்துறை முற்றாக இயங்க முடியாத நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளது. ஒரு காலத்தில் வடபகுதி கூட்டுறவுத்துறையின் வளர்ச்சி தென்கிழக்காசியாவிலேயே முன்மாதிரியாகத் திகழ்ந்தது. ஆனால் இன்று நலிவுற்றுக் காணப்படுகிறது.

இந்த நிலையை எமது தமிழீழத்தில் மாற்றியமைக்க கூட்டுறவாளர்களும், கூட்டுறவுத் துறையைச் சேர்ந்த பணியாளர்கள், பணிப்பாளர்கள் ஒன்றிணைந்து செயற்பட்டு எண்பதுகளுக்கு முன் இருந்த நிலையை ஏற்படுத்த முன்வர வேண்டுமென்பதே எனது பெருவிருப்பமாகும்.

விடுதலைப் போராட்ட காலத்தில் மக்களை நேசித்து தியாக சிந்தையுடன் மக்களுக்காக சேவையாற்றிய கூட்டுறவுத்துறை மென்மேலும் வளர்ச்சியுற்று தமிழீழ மக்களுக்கு சமூக, பொருளாதார வளர்சியில் தொடர்ந்து சேவையாற்ற வேண்டுமென அன்புடன் வேண்டுகின்றேன்.

**வீ. பூவண்ணன்**
**தமிழீழ நிர்வாகசேவை பொறுப்பாளர்**
**தமிழீழம்**

### இலங்கை தேசிய கூட்டுறவுச் சபையின் தலைவர் அவர்களின் வாழ்த்துச்செய்தி



உலகம் முழுவதும் வாழ்கின்ற சுமார் 720மில்லியன் கூட்டுறவாளர்கள் 82ஆவது சர்வதேச கூட்டுறவு தினத்தினை நினைவு கூருகின்ற இச்சந்தர்ப்பத்தில் உங்கள் மாவட்டத்தினால் கொண்டாடப் படுகின்ற கூட்டுறவு தினத்தின் பொருட்டு இலங்கை தேசியக் கூட்டுறவு இயக்கத்தின் தலைவர் என்ற வகையில் இவ்வாழ்த்துச் செய்தியினை அனுப்புவதில் பெருமகிழ்ச்சி அடைகின்றேன்.

இலங்கை கூட்டுறவு இயக்கத்திற்கு 10தசாப்தங்கள் கடந்திருப்பினும் 82ஆவது சர்வதேச கூட்டுறவு தினத்தினையே நாம் கொண்டாடுகின்றோம்.

கடந்த இரு தசாப்த காலப்பகுதிக்குள் வடக்கு கிழக்குப் பிரதேசத்தில் நிலவிய போர்ச் சூழல் காரணமாக கூட்டுறவுச் சங்கங்களுக்கு ஓரளவு பின்னடைவு ஏற்பட்டாலும், அக்காலத்திற்குள் சமூக, பொருளாதார மற்றும் கலாச்சார அமைப்புகள் என்ற வகையில் அவை இதர அமைப்புக்களை விட முன்னணியில் இருந்தன என்பது எனது நம்பிக்கையாகும்.

அவ்வாறான சூழலிற் குள்ளாயினும் வடக்கு கிழக்குப் பிரதேசத்தின் பல்வேறு வகையிலான கூட்டுறவுச் சங்கங்களை சமூக, பொருளாதார மற்றும் கலாச்சார அமைப்புக்களாக பாதுகாக்கவும், வலுப்பெறச் செய்யவும் மேற்கொள்ளப்பட்ட கடின உழைப்புத் தொடர்பாக இலங்கை தேசிய கூட்டுறவுச் சபையின் தலைவர் என்ற வகையில் எனது நன்றியினைத் தெரிவித்துக் கொள்வதற்கு இச்சந்தர்ப்பத்தை பயன்படுத்துகின்றேன்.

இன்று தாராள சந்தைப் பொருளாதார கொள்கையின் கீழ் இலங்கைக் கூட்டுறவு இயக்கம் பெரும் பிரச்சினைகளை எதிர்நோக்கியுள்ளது என்பதைக் குறிப்பிட விரும்புகின்றேன். இதன் காரணமாக கூட்டுறவின் மீது விசேட அரச ஆதரவு கிடைக்காதபடியால், கூட்டுறவுச் சங்கங்கள் பலவீனமான அமைப்புக்களாக மாறியுள்ளன. தனியார் துறைக்குப் போன்றே கூட்டுறவுத் துறைக்கும் வரிச்சுமைகளை விதித்துள்ள மையினால் அச்சங்கங்கள் பெரும் இடர்பாடுகளை எதிர் நோக்கியுள்ளன.

அபிவிருத்தியடைந்து வருகின்ற நாடுகளில் கூட்டுறவு இயக்கத்திற்கு அரசு பல்வேறு வகைகளிலும் ஒத்துழைப்புகளை நல்கி வருவதனால் சமூக மற்றும் பொருளாதார பிரச்சினைகளைத் தீர்ப்பதில் கூட்டுறவு இயக்கமானது வலுவான கருவியாக அமைந்துள்ளது. எனவே 82ஆவது சர்வதேச கூட்டுறவு தினத்தை நினைவு கூரும் இச்சந்தர்ப்பத்தில் முழு நாட்டினதும் கூட்டுறவாளர்கள் இயக்கத்தின் மேம்பாட்டிற்காக உரிமைகளைப் பாதுகாத்துக் கொள்வதற்கு கூட்டாக ஒன்று திரள வேண்டுமென நான் திடமாக நம்புகின்றேன்.

82ஆவது கூட்டுறவு தினத்தினை நினைவு கூருகின்ற தங்கள் விழா சகலவழிகளிலும் வெற்றிபெற வேண்டுமென இதயகத்தியுடன் வாழ்த்துகின்றேன்.

பந்து ரணவக
தலைவர்
இலங்கைதேசிய கூட்டுறவுச் சபை

### மேலதிக அரசாங்க அதிபரின் வாழ்த்துச்செய்தி



எமது மாவட்ட கூட்டுறவு சங்கங்களால் நடாத்தப்படுகின்ற கூட்டுறவு தின விழாவிற்கான வாழ்த்துச் செய்தியை வழங்குவதில் மிக்க மகிழ்ச்சியடை கின்றேன். கூட்டுறவு என்பது எமது நாட்டிலே முன்பிருந்தே மிகவும் சிறப்பாகவும் வெற்றி கரமாகவும் இயங்கிவருகின்ற ஒரு துறையாகும்.

கூட்டுறவு இன்றேல் எத்துறையி லும் வெற்றியடைய முடியாது.. ஒரு நாட்டின் வளர்ச்சிக்கு கூட்டுறவுத்துறையின் பங்களிப்பு மிக அத்தியாவசியமானது. எமது மாவட்டத்தில் கூட்டுறவுத்துறை மிகவும் வினைத்திறன் வாய்ந்ததாக இயங்கிவந்ததை அவதானிக்கின்றோம். தற்போது கூட்டுறவுத்துறை எமது பகுதியிலே பாரிய பின்னடைவை எதிர்நோக்கி நிற்கின்றது. கடந்த இரு தசாப்தங்களாக நடைபெற்ற யுத்தத்தின் விளைவாக பல கட்டமைப்பு வசதிகளையும் பொருள் இழப்புக்களையும் சந்தித்ததும் மிக முக்கிய காரணமாகும். எத்தகைய இழப்புக்களைச் சந்தித்தபோதும் இன்றும் சிறப்பாக சேவையாற்றி வருகின்றது. இடப்பெயர்வுகள், விமானக் குண்டு வீச்சுக்கள், செல்தாக்குதல்களுக்கு மத்தியிலேயும் ஊழியர்கள் சேவை செய்திருக்கிறார்கள். சிலர் தமதுயிரையே அர்ப்பணித்தும் இருக்கிறார்கள் . இவர்களுடைய பணி மகத்தானது குறைந்த வேதனத்துடன் சிறந்த சேவையாற்றி வருகிறார்கள்.

காலத்திற்கேற்ப கூட்டுறவுத்துறையும் தனியார்துறையுடன் போட்டி போடக்கூடிய நிலையை ஏற்படுத்தவேண்டும். இதற்கேற்ப பல்வேறுதுறைகளிலும் தன்னை ஈடுபடுத்த வேண்டும். உற்பத்தித்துறைகளிலே நாட்டம் செலுத்த வேண்டும். கூட்டுறவுத்துறை மிகவும் வலுவான அமைப்பாக மீண்டும் தன்னை வளர்த்துக்கொள்ள வேண்டும். எந்தவொரு வியாபார செயற்பாட்டையும் மாவட்டத்தின் மூலை முடக்கெல்லாம் செயற்படுத்தக் கூடிய ஆளணியைக் கொண்ட கூட்டுறவுத்துறையால் மட்டுமே அர்ப்பணிப்புடனும் சேவைமனப்பாங்குடனும் சேவையாற்ற முடியும். ஊழியர்களுடைய சேவை போற்றப்பட வேண்டிய ஒன்றாகும். எமது மாவட்ட கூட்டுறவுத்துறை மென்மேலும் சிறப்பாக வளர்ச்சியடையவும் ஊழியர்களுடைய வாழ்வு சிறக்கவும் கூட்டுறவு நாளிலே வாழ்த்துகின்றேன்.

**நா. வேதநாயகன்,**
**மேலதிக அரசாங்க அதிபர்.**
**கிளிநொச்சி மாவட்டம்.**

### மக்களின் விடுதலைக்கான வழித்தடமான கூட்டுறவு



சர்வதேச கூட்டுறவாளர்களின் உணர்வுகளை ஒரே நிலையில் இணைத்துக்கொண்டு மனித சமுதாயத்தின் விடுதலைக்காகவும், உயர்ச்சிக்காகவும் குரல்கொடுக்கும்கூட்டுறவாளரின் நாளைமுன்னிட்டு கிளிநொச்சி மாவட்டத்தில் நடாத்தப்படும் கூட்டுறவாளர்களின் விழாவினைக் கண்டு உவகையடைகின்றேன். துன்பங்களின் எல்லைகளுக்குச் செல்லும் போதெல்லாம் துணிவுடன் பணியாற்றும் கூட்டுறவு இயக்கம் மக்களின் விடுதலைக்கும், உயர்வுக்கும் உழைக்கும் கிராமிய இயக்கமாகப் பணியாற்ற நாம் அனைவரும் ஒன்றிணைவோம்.

**அ. கேதீஸ்வரன்,**
**கிளிநொச்சி மாவட்ட கூட்டுறவுச் சபையின் தலைவரும்,**
**இலங்கை தேசிய கூட்டுறவு சபையின் உபதலைவரும்.**

---

**கிளி/மாவட்ட கூட்டுறவு சங்கங்களின் ஆதரவுடன்**
**கிளி/மாவட்ட கூட்டுறவு சபை நடாத்தும்**
**82ஆவது சர்வதேச கூட்டுறவாளர் தினம் -2004**

**தலைமை:-** திரு.க.தர்மசூரியர் அவர்கள்
உபதலைவர் மாவட்ட கூட்டுறவு சபை/கிளி
தலைவர், கரைச்சி கிழக்கு ப.நோ.கூ.சங்கம்.
**காலம்:** 2004/07/08(வியாழக்கிழமை)மு.ப 9.00 மணி
**இடம்:-** பண்பாட்டு மண்டபம், கிளிநொச்சி.

* **முதன்மை விருந்தினர்:-** திரு.சோ.தங்கன் அவர்கள்
துணைப்பொறுப்பாளர்,
தமிழீழ அரசியல்துறை, தமிழீழம்.

* **சிறப்பு விருந்தினர்:**
திரு.கி.சிவநேசன் அவர்கள்
பாராளுமன்ற உறுப்பினர்.
திரு.இளங்கோவன் அவர்கள்
கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளர்(வ/கி)
திரு.பன்துரணவக அவர்கள்
தலைவர் இலங்கை தேசிய கூட்டுறவு சபை.
திரு.நா.வேதநாயகன் அவர்கள்
மேலதிக அரசாங்க அதிபர்- கிளி/மாவட்டம்
திரு.பொ.இளஞ்சேரன் அவர்கள்
துணைப் பொறுப்பாளர், தமிழீழ நிர்வாக சேவை, தமிழீழம்.

* **கௌரவ விருந்தினர்:-**
திரு.பொன் நித்தியானந்தம் அவர்கள்,
பிரதேச செயலர், கரைச்சி.
திரு.சீ.சிவசொரூபநாதபிள்ளை அவர்கள் ,
பிரதேச செயலர், கண்டாவளை
திரு.க.வைரமுத்து அவர்கள், பிரதேச செயலர் -பூநகரி
திரு.த.கந்தசாமி அவர்கள், கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர்.'.கிளி.
திரு.ஏ.சின்னத்தம்பி அவர்கள், கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர், (பனை, தென்னை வளம்) வன்னி.
திரு.ஐ.இசையமுதன் அவர்கள் பொறுப்பாளர் தமிழீழ நிர்வாக சேவை.'.கிளி. மாவட்டம்.
திரு.கி.முரளி அவர்கள் பொறுப்பாளர் தமிழீழ அரசியல்துறை.'.கிளி மாவட்டம்.
திரு.ப.அரியரத்தனம் அவர்கள் வலயக்கல்விப் பணிப்பாளர், கிளிநொச்சி.
திரு.அ.கேதீஸ்வரன் அவர்கள் உபதலைவர், இலங்கை தேசிய கூட்டுறவு சபை.
(தலைவர்-மாவட்ட கூட்டுறவுசபை கிளி.

**நிகழ்ச்சி நிரல்:-**
* அதிதிகள் வருகை.
* வரவேற்பு நடனம்.
பூநகரி ப.நோ.கூ.சங்கம்.
* பொதுச்சுடர் ஏற்றல்.
* தேசியக் கொடியேற்றல்.
* அகவணக்கம்
* கூட்டுறவுக் கொடியேற்றல் (மாவட்ட கூட்டுறவு சங்கங்களின் தலைவர்கள்)
* கூட்டுறவுக் கீதம்.
பூநகரி .ப.நோ.கூ.சங்க பணியாளர்கள்.
* மங்கள விளக்கேற்றல்:
கௌரவ விருந்தினர்கள்.
திரு.வே.விஜயரத்தினம் அவர்கள் தலைவர் அக்கராயன்ப.நோ.கூ.சஙகம்.
திரு.கா.கார்த்திகேசு அவர்கள் தலைவர் பூநகரி ப.நோ.கூ.சங்கம்.
திரு.க.புவனேந்திரம் அவர்கள் தலைவர் பனை தெ.வ.அ.கூ.சங்கம் பளை.
திரு.க.தருமராசா அவர்கள் தலைவர் பூநகரி ப.தெ.வ.அ.கூ.சங்கம்.
திரு.இ.பொன்னம்பலநாதன் அவர்கள் தலைவர் திருவையாறு ப.வா.திட்ட.விவசாய கூ.சங்கம்.
திரு.சி.வதனராசா அவர்கள் தலைவர் பளை ப.நோ.கூ.சங்கம்.
திரு.கி.பாஸ்கரன் அவர்கள் தலைவர் வட.பி.பா.ஊ. உ. கூட்டுறவு சங்கம்

(5ம் பக்கம் பார்க்க)

**28.** அரசியல் துறைப் பொறுப்பாளரைச் சந்தித்த போர் நிறுத்தக் கண் காணிப்புக்குழுத் தலைவரிடம் "கருணாவிற்கு இராணுவம் வழங்கும் ஒத்துழைப்பினைப் பாரிய பிரச்சினையாக நாம் கருதுகின்றோம்" எனத் தெரிவித்தார்.



கண்காணிப்புக் குழுவுடன் சந்திப்பு

**29.** லெப். கேணல் கங்கை அமரனின் நினைவாக கிராஞ்சியில் மண்டபம் திறந்து வைக்கப்பட்டது.




நினைவு மண்டபம் திறப்பு

**30-** இராணுவத் தளபதியும் முப்படைகள மற்றும் பொலிசாரின் விசேட அதிகாரியுமான லெப்.ஜெனரல் பலகல்ல ஓய்வு பெற்றார்.

*. பாராளுமன்ற அமர்வின் போது இரு பிக்கு எம்.பிக்கள் மீது தாக்குதல் நடத்தப்பட்டதற்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் முகமாக ஹெல உறுமய ஏற்பாடு செய்ய பாதயாத்திரை ஆரம்பம்.

*. நோர்வே விசேட தூதுவர் தலைமையிலான குழுவினர் பிரதமர் மகிந்த ராஜபக்ஷவைச் சந்தித்து விடுதலைப் புலிகளுடன் நடத்திய பேச்சுவார்த்தைகள் தொடர்பான விடயங்களை எடுத்துக் கூறினர்.




*. நோர்வேயின் விசேட தூதுவர் எரிக்சூல்ஹெய்ம் தலைமையிலான குழுவினரைச் சந்தித்த அரசியல் துறைப் பொறுப்பாளர் தலைமையிலான குழுவினர் கருணாவை வைத்துக் கொண்டு அமைதிக்கு குந்தகம் விளைவிக்க வேண்டாமெனத் தெரிவித்தனர்.



நோர்வே தூதுக் குழுவுடன்

**1.** நாட்டின் 17ஆவது இராணுவத் தளபதியாக லெப்.ஜெனரல் சாந்த கொட்டேகொட் பதவி ஏற்றார்.

*. திருகோணமலை புல்மோட்டைப் பகுதிக்கு அரசியல் பணிக்காகச் சென்ற திருமலை மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் எழிலன் படையினரால் தடுத்து நிறுத்தி திருப்பி அனுப்பப்பட்டார்.

**2.** கிளிநொச்சி மாவட்ட அரசியல் துறையினரதும், கிளிநொச்சி அழகியல் கலாமன்றத்தினதும் ஆதரவில் கிளிநொச்சி நுண்கலைக் கல்லூரியினரால் முழு நிலா கலையரங்கு.

*. முள்ளியவளைப் பிரதேசத்திற்கான கிராமிய அபிவிருத்தி வங்கி திறந்து வைக்கப்பட்டது.

*. கரும்புலிகள் நினைவு நாளை முன்னிட்டு நடத்தப்பட்ட தடகளப் போட்டிகளின் முதல் நாள் நிகழ்வுகள் முல்லை பெரு விளையாட்டு ஆரம்பம் மைதானத்தில் நிறைவேறியது.



முதல்நாள் நிகழ்வில்

**3.** தமிழீழ இளையோர் தேசிய விளையாட்டு விழா யாழ். பொது விளையாட்டரங்கில் கோலாகலமாக ஆரம்பமாகியது.

**4.** கரும்புலிகள் தினத்தை முன்னிட்டு நடத்தப்பட்ட முதலாவது தமிழீழ தேசிய இளையோர் தடகள விளையாட்டு விழாவில் பரிசளிப்பு வைபவம் யாழ். பொது மைதானத்தில் சிறப்பாக நடைபெற்றது.



பரிசளிப்பு விழா

# கரைதுறைப்பற்று பிரதேச சபை, முல்லைத்தீவு

## வேலைகளுக்கான கேள்வி அறிவித்தல் - 2004

கரைதுறைப்பற்று பிரதேச சபையினால் கீழ் குறிப்பிடப்படும் வேலைகளுக்கு பதிவு செய்யப்பட்ட ஒப்பந்ததாரரிடம் இருந்தும், உள்ளூரில் அனுமதிக்கப்பட்ட ஒப்பந்ததாரரிடம் இருந்தும், ஒப்பந்த வேலை செய்வதற்கு அனுமதிக்கப்பட்ட பொது நிறுவனங்களிடம் இருந்தும் கேள்விகள் கோரப்படுகின்றன. 06.07.2004ஆம் திகதி தொடக்கம் 14.07.2004ஆம் திகதி பகல் 10.00 மணிவரை கேள்விப்பத்திரங்கள் வழங்கப்படும்.

கேள்விப்பத்திரங்கள் நேரிலோ அல்லது பதிவுத் தபால் மூலமோ 15.07.2004ஆம் திகதி அன்று பிற்பகல் ஒரு மணிவரை சேர்க்கப்படலாம். அன்று பிற்பகல் 2.00மணிக்கு கேள்விகள் பரிசீலிக்கப்படும். கேள்வியை ஏற்கவோ, நிராகரிக்கவோ கேள்விச் சபைக்கு அதிகாரமுண்டு. கேள்விகள் திறக்கப்படும் போது கேள்விக்காரர் சமூகம் அளித்திருக்கலாம். கேள்விகள் இணைப்படிவத்தில் பூர்த்தி செய்யப்பட்டு மூலப் பிரதியை "செயலாளர், கரைதுறைப்பற்று பிரதேசசபை, முல்லைத்தீவு" என்ற முகவரிக்கும், இணைப பிரதியை "பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர், பிரா/ உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகம், முல்லைத்தீவு" என்ற முகவரிக்கும் அதே நாளில் அனுப்பி வைக்கப்படல் வேண்டும். காகித உறையில் மேல் மூலையில் வேலையின் பெயரை எழுதி "கேள்வீபத்திரம் 2004" எனக் குறிப்பிடப்பட்டு இருத்தல் வேண்டும். மேலதிக விபரங்களை பிரதேச சபையில் அறிந்து கொள்ளலாம்.

| இல | வேலையின் பெயர் | கேள்வி வைப்புப் பணம் மீளளிக்கப் படக் கூடியது | கேள்விப்பத்திரப் பணம் மீளளிக்கப் படாதது. | வற் வரி பற்றி அலுவலகத்தில் அறிந்து கொள்ளலாம் |
|---|---|---|---|---|
| 01. | முல்லைத்தீவு பிரதேசசபை வாகனத் தரிப்பிடம் அமைத்தல். | 1750/- | 250/- | |
| 02. | செம்மலை உப அலுவலகக்கூரை திருத்த வேலை. | 2715/- | 250/- | |

கரைதுறைப்பற்று பிரதேசசபை,
முல்லைத்தீவு.
05-07-2004

(சி 9899)

(இ.கிருஷ்ணபிள்ளை),
செயலாளர்,
கரைதுறைப்பற்று பிரதேசசபை,
முல்லைத்தீவு.

# அட்டாளைச் சேனையில் கொள்ளை சந்தேக நபர் கொழும்பில் கைது

(மட்டக்களப்பு)

அட்டாளைச்சேனையில் நடந்த 265000 ரூபா பெறுமதியான நகைக் கொள்ளை சம்பவம் தொடர்பாக தேடப்பட்டு வந்த சந்தேக நபரான காத்தான்குடியைச் சேர்ந்த றபாய்தீன் என்பவர் நேற்று முன்தினம் கொழும்பு ஆமர் வீதியில் உள்ள லொஜ் ஒன்றில் வைத்துக் கைது செய்யப்பட்டுள்ளார்.

இவரை அக்கரைப்பற்று பொலிஸ் நிலைய குற்றத்தடுப்பு பொறுப்பதிகாரி எஸ்.எம். சதாத் தலைமையிலான பொலிஸ் குழுவினர் கைது செய்துள்ளனர். இவரால் திருடப்பட்ட நகைகளை இவர் குருநாகல், கொழும்பு, கல்முனை, காத்தான்குடி போன்ற பிரதேசங்களில் விற்றுள்ளாரென பொலிசாரின் ஆரம்ப விசாரணைகளில் இருந்து தெரிய வருவதாக சதாத் மேலும் தெரிவித்தார். இவர் நேற்று முன்தினம் அக்கரைப்பற்று மாவட்ட நீதிமன்றில் ஆஜர்படுத்தப்படவிருந்தார்.

-பாவனைக்குதவாத நிலையில்-

# அம்பேவல பாற்பண்ணையில் 1300 தொன் பால்மா அழிப்பு

(கொழும்பு)

அம்பேவல பாற்பண்ணையில் ஒதுக்கிய நிலையில் காணப்பட்ட சுமார் 1300 தொன் கைலண்ட் பால்மா பக்கற்றுக்களை அழித்துவிடுமாறு விவசாய அமைச்சர் அனுரகுமார திஸாநாயக்க உத்தரவிட்டார். இந்த பால்மா பைக்கற்றுக்கள் ஆறு மாத காலம் மாத்திரமே காலாவதி திகதியை கொண்டிருக்கையில் இறக்குமதி செய்யப்பட்டுள்ளன. இது தொடர்பில் நேற்று முன்தினம் அமைச்சர் நேரடி விஜயம் ஒன்றை மேற்கொண்டதுடன் இவ்வாறு மக்களுக்கு ஒவ்வாத பால்மாக்களை இறக்குமதி செய்தவருக்கு எதிராக சட்டநடவடிக்கை மேற்கொள்ளப் போவதாகவும் குறிப்பிட்டார். .(32)

## காணி வழங்கல் ரத்து

(கொழும்பு)

ஐக்கிய தேசியக் கட்சி ஆட்சிக்காலத்தில் பெருந்தோட்டத் துறை அமைச்சினால் வழங்கப்பட்ட காணி வழங்கல்கள், குத்தகை அடிப்படையில் மேற்கொள்ளப்பட்ட காணி வழங்கல்கள் யாவும் ரத்துச் செய்யப்பட்டுள்ளதாக நீர்ப்பாசன, கால்நடை, காணி அமைச்சர் அநுரா திஸாநாயக்க அறிவித்துள்ளார். அமைச்சரவைக் கூட்டத்தில் இது அறிவிக்கப்பட்டுள்ளது.

# ஐ.தே.மு.இன் புதிய தேசியப் பட்டியல் பாராளுமன்ற உறுப்பினர் நியமனம்

ஐக்கிய தேசிய முன்னணி வெற்றிடமாகவுள்ள தனது தேசியப் பட்டியல் பாராளுமன்ற உறுப்பினர் பதவிக்கு மூவரை நியமித்துள்ளது.

புதிய தேசியப் பட்டியல் பாராளுமன்ற உறுப்பினர்களாக பஸீர் சேகு தாவுத், மாயோன் முஸ்தபா மற்றும் எஸ்.நிஜாமுடின் ஆகியோர் நியமிக்கப்பட்டுள்ளனர். கடந்த மாதம் ஐக்கிய தேசிய முன்னணி பாராளுமன்ற உறுப்பினர் பதவியில் இருந்த மூவர் இராஜினாமாச் செய்த நிலையிலேயே புதிய மூவரின் பெயர்களைத் தேர்தல் ஆணையாளர் தயானந்த திசாநாயக்கவிற்கு கட்சியின் செயலாளர் மில்ரோய் பெரேரா அறிவித்துள்ளார்.

# கறுப்புக்குதிரையாக கருதப்பட்ட கிரீசின் வெற்றி ஆச்சரியமளிக்கிறது

## இந்திய கால்பந்து பயிற்சியாளர்


போர்த்துக்கல் தலைநகர் லிஸ்பனில் கற்பனை கூட செய்ய முடிந்திராத ஒன்று நடந்து விட்டது. ஆம்! ஐரோப்பிய கால்பந்து சாம்பியன் பட்டத்தை கிரீஸ் வென்று விட்டது.கிரேக்க மக்கள் மகிழ்ச்சிக் கோஷங்களை முழங்குகிறார்கள். ஐரோப்பிய கால்பந்து சாம்பியன் பட்டத்துக்கு முன்னதாக முக்கியப் போட்டிகளில் ஓர் ஆட்டத்தில் கூட வென்றிராத கிரீஸ். முடிந்துள்ள போட்டியில் இரண்டாவது முறையாக போர்த்துக்கலை வென்று கோப்பையைக் கைப்பற்றியுள்ளது. இம்முறையும் சாரிஸ்டயாஸ்தான் வெற்றிக் கோலை அடித்தார். உண்மையாகவே இது அற்புதமாக இருந்தது. கறுப்புக் குதிரையாக கருதப்பட்ட கிரீசின் வெற்றி எனக்கு மிகவும் ஆச்சரியமளித்தது. பிரான்ஸ், ஜெர்மனி, நெதர் லாந்து, இத்தாலி, போர்த்துக்கல், ஸ்பெயின், இங்கிலாந்து அணி களெல்லாம் இருக்கும் போது ஓர் ஆட்டத்திலாவது கிரீஸ் வெற்றி பெற முடியும் என்பதை எப்படி நினைத்து பார்த்திருக்க முடியும்? ஆனால் அவர்கள் வென்றார்கள். இதுதான் கால்பந்து போட்டிகளின் அழகான அம்சம். இங்கு வெற்றிபெற முடியும் என்பதற்கு எந்தவித உத்தரவாதமும் கிடையாது. கடின உழைப்பாலும் நம்பிக்கையாலும் எதுவும் சாத்தியமே! இரு வாரங்களாக நல்ல களிப்பூட்டும் ஆட்டங்களைத் தந்த யூரோ -2004 முடிந்து விட்டது. இதற்கு அடுத்ததாக ஆகஸ்ட் 14இல் தொடங்கும் பிரீமியர்ஷிப் வரை நாம் காத்திருக்க வேண்டும். கடந்த இருவாரங்களாக மிகச் சிறந்த ஆட்டங்கள், விறுவிறுப்பான தருணங்கள், சர்ச்சைகள், எதிர்பாராத தோல்விகள் அனைத்தையும் கண்டோம். ஆரம்பக் கட்டத்தில் ஜெர்மனியுடன் லாத்வியா செய்து கொண்டதே ஓர் எச்சரிக்கையாக இருந்தது. இதனா



லேயே அடுத்த சுற்றுக்கு முன்னேறும் வாய்ப்பு ஜெர்மனிக்கு குறைந்தது. லாத்வியாவை நெதர்லாந்து வென்றாலும் அவர்களுக்கும் ஏமாற்றம் தான்! ஸ்வீடனை பெனால்டி ஷீட் அவுட்டில் வீழ்த்தி அரை இறுதி வரை முன்னேறினாலும் போர்த்துக்கலுக்கு சமமான ஆட்டத்தை நெதர்லாந்து வெளிப்படுத் வில்லை. என்னைக் கேட்டால். அரை இறுதிவரை நெதர்லாந்து முன்னேறியதே அதிஷ்டவசம் தான் என்பேன்! இங்கிலாந்துடனான ஆட்டத்தில் பிரான்சின் ஜினெடின் ஜிடேன் அற்புதமான இரு கோல்களை அடித்தார். அந்த ஆட்டத்தில் பெனால்டி வாய்ப்பை பெக்காம் வீணடித்தது திருப்புமுனையாக அமைந்தது. தொடர்ந்து சிறப்பாக ஆடும் தன்மை பிரான்ஸிக்கு இல்லாமல் போனது. கிரீசுக்கு எதிரான மிக முக்கியமான ஆட்டத்தில் அவர்கள் சிறப்பாக விளையாடவில்லை. கிரீஸ் கோலடித்ததிற்கு பிராஞ்சிடமிருந்து பதிலேதுமில்லை! இத்தொடரில் போர்த்துக்கல்லைப்போலவேசெக். குடியரசும் சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தியது. தாக்குதல் ஆட்டத்துக்காகவும் ஆர்வத்துடன் விளையாடியதற்காகவும் இவ் விரண்டு அணிகளும் பாராட்டுக் குரியவை! தற்போது புதிய திற மைசாலிகள் உறுவாகியுள்ளார்கள்! ரொனால்டோ, ரூனி, டெல்லாஸ், பல்லாக், நெட்விட், மற்றும் பலர். ஆட்டத்தைக்காண வந்த கூட்டத்தினிடேயும் எவ்வித பிரச் சினையுமில்லை. மேலும் நடுவர்களின் பணி உயர்தரமாக இருந்தது. அனைத்து அம்சங்களிலும் இது மிகச்சிறந்த போட்டியாக இருந்தது.




# ஏமாற்றம் அளிக்கிறது-ஸ்கொலரி



மேம்பட்ட அணியிடம் தான் தோல்வியுற்றுள்ளோம்.என்றாலும் ஏமாற்றம் அளிக்கிறது என போர்த்துக்கல் அணியின் பிரேசில் பயிற்றுனர் லூயிஸ் பிலிப்ஸ்கொலரி கருத்து தெரிவித்துள்ளார். போர்த்துக்கல் ரசிகர்களுக்கு பரிசு கொடுக்காதது குறித்து வருத்தமடைகிறேன். அதற்காக இன்னும் உழைக்க வேண்டியுள்ளது என்றார் 55 வயதாகும் ஸ்கொலரி. உலகக் கோப்பை போட்டிக்குப் பிறகு மிகப்பெரிய போட்டியாக ஐரோப்பியக் கோப்பை போட்டி 4 ஆண்டுகளுக்கு ஒருமுறை நடைபெற்று வருகிறது. உலக கால்பந்தில் ஐரோப்பியக் கண்டமே வலுவானதாக உள்ளது. 1990 சோவியத் யூனியன், 1964 ஸ்பெயின், 1968 இத்தாலி, 1972 மேற்கு ஜெர்மனி, 1976 செக்.குடியரசு, 1980 மேற்கு ஜெர்மனி, 1984 பிரான்ஸ், 1988 நெதர்லாந்து, 1992 டென்மார்க், 1996 ஜெர்மனி, 2000 பிரான்ஸ், 2004 கிரீஸ் போன்ற நாடுகள் யூரோக் கிண்ணத்தைக் கைப்பற்றி மகுடம் சூடின.

# முத்தையா முரளிதரன் பந்து வீச்சு தொடர்பில் விரைந்து நடவடிக்கை எடுக்க ஐ.சி.சி. உறுதி

முத்தையா முரளிதரன் பந்துவீச்சு குறித்த இலங்கையின் மறுஆய்வுக் கோரிக்கையை வேகப்படுத்த சர்வதேச கிரிக்கெட் கவுன்சில் (ஐ.சி.சி) உறுதி அளித்துள்ளது. முத்தையா முரளிதரன் மீது மேற்கொண்டுள்ள முடிவு குறித்து மறுபரிசீலனை செய்ய வேண்டுமென சிறிலங்கா கிரிக்கெட் சபை வேண்டுகோள் விடுத்தது. அதற்கு முடிவு தெரிவிக்காமல் இருந்து வந்தது ஐ.சி.சி. இந் நிலையில் ஐ.சி.சி.யின் ஆண்டு மாநாட்டில் விரைந்து முடிவெடுக்க வேண்டும் என சிறிலங்கா கிரிக்கெட் வாரியம் கோரிக்கை விடுத்தது.



# முரளிதரனின் சாதனையை முறியடிக்கும் ஷேன் வோர்னின் முயற்சி பலனளிக்காது

சுழற்பந்து வீச்சாளரான முத்தையா முரளிதரனின் உலக சாதனையை முறியடிக்க அவுஸ்ரேலிய சுழற்பந்து வீச்சாளர் ஷேன்வோர்ன் எடுத்துவரும் முயற்சிகள் வெற்றியளிக்க மாட்டாது என்பதற்கான அறிகுறிகள் தற்போது தென்படுவதாக விளையாட்டு விமர்சகர்கள் தெரிவிக்கின்றனர்.

இவ்வாரம் நடைபெறவுள்ள இரண்டாவது டெஸ்ட் போட்டியில் 8 விக்கெட்டுக்களை பெற்று முரளிதரனின் சாதனையை முறியடிக்க ஷேன்வோர்ன் எதிர்பார்த்துள்ள போதிலும் அது இலகுவான காரியமல்ல என்று அவர் தற்போது உணர்ந்துள்ளதாக அறியவருகிறது.

இரண்டாவது டெஸ்ட் கிரிக்கெட் சிறிலங்காவுக்கும் அவுஸ்ரேலியாவுக்கும் இடையில் எதிர்வரும் வெள்ளிக்கிழமை கெவின்சில் நடைபெறவுள்ளது.

கடந்தவாரம் நடைபெற்ற முதலாவது டெஸ்ட் போட்டியில் ஷேன்வோர்ன் மூன்று விக்கெட்டுக்களை மாத்திரமே கைப்பற்றினார்.

ஒரு போட்டி ஒன்றில் முரளிதரன் ஏழு அல்லது எட்டு விக்கெட்டுக்களை கைப்பற்றும் திறமையை கொண்டுள்ளதாகவும் அவர் இன்னும் நான்கு அல்லது ஐந்து ஆண்டுகள் விளையாடினால் ஆயிரம் விக்கெட்டுக்களை மிக எளிதில் கைப்பற்றி விடுவார் எனவும் ஷேன்வோர்ன் குறிப்பிட்டுள்ளார்.

# "பயிற்சியின் ஊடே உயர்சி பெறுவோம்" அரும்புகள்

## உதைபந்து பயிலரங்கம் கிளிநொச்சியில் ஆரம்பம்

"பயிற்சியின் ஊடே உயற்சி பெறுவோம்"என்னும் இலக்குடன் கிளிநொச்சி இளையோர் செயற்பாட்டு நிறுவனத்தினால் ஆரம்பிக்கப்பெற்ற "அரும்புகள் உதைபந்து பயிலரங்கம்" நேற்று வைபவரீதியாக தொடங்கி வைக்கப்பெற்றது.

கிளி.பொது விளையாட்டு மைதானத்தில் பிற்பகல் 4.00 மணிக்கு ஆரம்பமான இந் நிகழ்வில் முதலில இப்பயிலரங்கத்தில் தமது பயிற்சியினை மேற் கொண்டு வரும் சிறார்கள் நிகழ்விற்கு வருகைதந்த விருந்தினர்களை வரவேற்று மைதானத்திற்கு அழைத்து வந்தனர்.

தொடக்க நிகழ்வு தமிழீழ விளையாட்டுத் துறைச்செயலர் அன்ரன் அன்பழகன் தலைமையில் நடைபெற்றது.

மங்கள விளக்கினை புலிகளின் குரல் பொறுப்பாளர் தமிழன்பன், கிளி.மாவட்ட விளையாட்டுத்துறை அதிகாரி கனகராசா ஆகியோர் ஏற்றி வைக்க, தமிழீழத் தேசியக் கொடியினை தமிழீழ அரசியல் துறைப் பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச் செல்வன் அவர்கள் ஏற்றிவைத்தார்.

அகவணக்கத்தினை அடுத்து உதைபந்துப் பயிலரங்கம் ஆரம்பிக்கப்பட்டது. நிகழ்வில் தமிழீழ விளையாட்டுத்துறையைச் சேர்ந்த ராஜா விடுதலைப்புலிகள் அமைப்பைச் சேர்ந்த நகுலன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

விளையாட்டு நிறைவில் தமிழீழ விளையாட்டுத்துறைத் தலைவரினால் உதைபந்தாட்ட விளையாட்டுச் சிறார்கள் தமிழீழ அரசியல் துறைப் பொறுப்பாளருக்கு அறிமுகம் செய்து வைக்கப் பெற்றனர்.

அடுத்து தமிழீழ விளையாட்டுத்துறைப் பொறுப்பாளர் கருத்துரைவழங்கினார்.நன்றியுரையினை பயிற்சி ஆசிரியர் ஜோயல் பியசீலன் வழங்கினார்.மைக்கல் ஓவனின் உதைபந்தாட்ட ஒளிநாடா சிறுவர்களுக்கு காண்பிக்கப்பட்டது.

6 தொடக்கம் 9 வயது வரை , 10-12 வயது வரை என இரு பிரிவுகளாக சிறார்கள் இப் பயிலரங்கத்தில் பயில்கின்றனர் உதைபந்து, ஆங்கிலம், வலுவூ ட்டல் கணினி என்பன இருவருடங்களுக்கு இப் பயிலரங்கில் கற்பிக்கப்படும் .

ஆங்கிலம் கற்றல், புதன் கிழமைகளில் நாடகம், பாடல் ,வரைதல் (நிறம் தீட்டல்) கதைகள் என்ற வகையிலும் வலுவூட்டலாக கராத்தே ஞாயிற்றுக்கிழமைகளிலும் கணினி சனிக்கிழமைகளிலும், சிறுவர் விளையாட்டுக்கள், வரைதல் நிறம் தீட்டலும் கணினி அறிமுகம் என்றவகையிலும் உதைபந்து புதன்,சனிக்கிழமைகளிலும் ஆரம்ப செயற்பாடு, ஆரம்ப நுட்பம் கற்றல் சுதந்திர ஆட்டம் என்ற வகையிலும் இப் பயிலரங்கத்தின் நோக்கம் அமைத்துள்ளதாக இளையோர் செயலாண்மை தெரிவித்துள்ளது.

(சோ.கு)

# ஆசியக் கிண்ணக் கிரிக்கெட் போட்டி

## பாகிஸ்தான் அணியில் சொகைப் அக்தார்



எதிர்வரும் 16 ஆம் திகதி கொழும்பில் ஆரம்பமாகவுள்ள ஆசியக் கிண்ண கிரிக்கெட் தொடரில் பங்கேற்கும் பாகிஸ்தான் அணியின் கைகளை உயர்த்தும் நோக்கில் வேகப்பந்து வீச்சாளரான சொகைப் அக்தர் அணியில் இணைந்துள்ளார்.

கடந்த இரண்டு மாதங்களாக இலண்டனில் இருந்து விட்டு தற்போது தாயகம் திரும்பியுள்ள அவர் ஏ.ப்.பி. செய்தி நிறுவனத்திற்கு வழங்கிய செவ்வியில் தனது அணியில் இணைந்து பங்காற்ற எப்பொழுதும் தயாராகவே இருப்பதாகவும் கடைசியாக இந்தியாவிடம் இரு போட்டித் தொடரிலும் தோல்வியடைந்தமை முடிந்தகதை என்றும் தெரிவித்துள்ளார்.


இத்தொடரில் தனது திறமையை வெளிப்படுத்தி கிண்ணத்தை கைப்பற்றுவது உறுதி என்று தெரிவித்த அவர் கடைசியாக நடைபெற்ற ஆசியக்கிண்ணப் போட்டியை தமது அணி கைப்பற்றியதை நினைவுபடுத்தினார்.





படங்கள் ; (சோதி, வரன்)

## சிந்தனைக்கு



நாம் ஒருவரையும் ஏமாற்றவும் இல்லை, துரோகம் இழைக்கவும் இல்லை. ஆனால் எம்மை யாரும் ஏமாற்றினால் அல்லது எமக்குத் துரோகம் இழைத்தால் நாம் பதிலடி கொடுக்கத் தயங்கமாட்டோம்.

தமிழீழத்தேசியத் தலைவர்.

ஈழநாதம்
மக்கள் நாளிதழ்
யாழ். சாலை, கிளிநொச்சி. 07-07-2004

மின் அஞ்சல்
Daily@eezhanatham.com
natham23ela@yahoo.com
தொலைபேசி 060-2213244
தொலைநகல் 021-2283948

## எல்லையைத் தொடும் அளவில்...!

மட்டக்களப்பில் இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதியில் விடுதலைப் புலிகள் மீது நேற்று முன்தினம் மேற்கொள்ளப்பட்ட இரு வேறு தாக்குதல்களில் விடுதலைப்புலிகள் உறுப்பினர் ஒருவர் கொல்லப் பட்டார். மற்றும் மூவர் படுகாயங்களுக்கு உள்ளாகியுள்ளனர். புதிய இராணுவத் தளபதியாக லெப்.ஜெனரல் சாந்தகொட்டேகொட பதவியேற்றதன் பின்னர் மட்டக்களப்பில் நடந்துள்ள முதல் தாக்குதல் சம்பவங்கள் இவையாகும்.

புதிய இராணுவத் தளபதியாகப் பதவியேற்றதும் லெப்.ஜெனரல் சாந்தகொட்டே கொட ஆற்றியஉரையில் சமாதானச் செயற்பாடுகள் அரசியல் வாதிகளினால் பாதிப்புக்குள்ளாகியுள்ளதாகத் தெரிவித்திருந்ததோடு கடந்த காலத்தில் சில இராணுவ அதிகாரிகள்/தளபதிகள் சனாதிபதி சந்திரிகாவிற்கோ அன்றி பாதுகாப்பு அமைச்சிற்கோ தெரியாமல் அனுமதியின்றி நடவடிக்கைகள் சிலவற்றை மேற்கொண்டதாகவும், இனிமேல் அவ்வாறு எதுவும் நடக்காது என்றும் தெரிவித்திருந்தார்.

இந்நிலையில் நேற்று முன்தினம் மட்டக்களப்பில் இரு வேறு தாக்குதல் சம்பவங்கள் நடந்துள்ளன. இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதிக்குள் நடந்த இந்தத் தாக்குதல் சம்பவங்கள் புதிய இராணுவத்தளபதியின் பேச்சிற்கு மாறானதாகும். அதாவது சமாதானத்திற்கு ஊறு விளைவிப்பவர்களாக அரசியல் வாதிகளை அவர் சுட்டிக் காட்டுகையில் இத்தாக்குதல்களோ ஆயுதப் படைத்தரப்பிலிருந்து சமாதானத்திற்கு ஊறுவிளைவிக்கும் வகையில் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகக் கொள்ளத்தக்கது.

இத்தாக்குதல் சம்பவங்கள் வழமை போல் இனந்தெரியாத வர்களால் நடத்தப்படடுள்ளதெனவும் பொலிசார் தீவிர விசாரணை கள் மேற்கோண்டுள்ளதாக அரசாங்கத் தரப்புக் கூறலாம். ஆனால், சிறிலங்கா அரசில் தீவிர விசாரணை என்பதன் அர்த்தம் எதிர் மாறான பொருள் கொண்டதாகவே எப்பொழுதும் இருந்து வந்துள் ளது. அதிலும் குறிப்பாக தமிழர் தொடர்பானது எனில் இதில் கேள்விக்கே இடமில்லை.

இதேவேளை சந்திரிகா குமாரதுங்கவும் இத்தாக்குதல் சம்பவங்கள் குறித்து அதிர்ச்சியும், கண்டனமும் வெளியிட்டுள்ளனர். தனது பங்கிற்குப் புதிய இராணுவ இணைப்பதிகாரி ஒருவரை நியமித்துள்ள தோடு விசாரணைக்கும் உத்தரவிட்டுள்ளார். ஆனால் இவை யாவும் கண்துடைப்பு நடவடிக்கைகளே ஆகும்.

ஆகையினால் இன்றுள்ள முக்கிய கேள்வியானது சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க அரசாங்கம் மீண்டும் ஒரு யுத்தத்திற்குத் தயாராகி விட்டதா? என்பதே ஆகும். ஏனெனில் சனாதிபதி சந்திரிகா தலைமையிலான அரசாங்கம் நடத்தும் மறைமுக யுத்தம் ஒரு எல்லையைத் தொடும் வரை வந்துவிட்டதே என்று கூறலாம்.

அரசாங்கத் தரப்பு புலிகளுக்கு எதிரான மறைமுக யுத்தம் ஒன்றை நடத்துகின்றது என்பது இன்று ஆய்விற்குரியதொரு விடயமல்ல. இவ் யுத்தத்தால் சிறிலங்கா ஆயுதப்படைத் தரப்பும் தமிழ் இனவிரோதக் குழுக்களும் பங்காளிகளாகவுள்ளனர் என்பது வெளிப்படையானது. இதில் கருணா தரப்பும் இருக்கலாம். இல்லாதுபோகலாம் ஆனால் அரசாங்கத் தரப்பே புலிகளுக்கு எதிரான மறைமுக யுத்தத்தை நடத்துகின்றதென்பதே நிஜமானதாகும்.

இதைவிடுத்து மட்டக்களப்பில் நடைபெற்று வரும் தாக்குதல் சம்பவங்களுக்கு ஆயுதப்படைத்தரப்பிற்கு அப்பால் வேறு எந்தக் குழுக்களைக் குற்றம் சாட்டுவதும், குறைகூறுவதும் அர்த்தமற்ற தொன்றாகும். மட்டக்களப்பு இராணுவக் கட்டுப்பாட்டுப்பகுதியில் நடைபெறும் தாக்குதல் சம்பவங்கள் அனைத்துக்கும் அரசாங்கத் தரப்பே பொறுப்பேற்கவேண்டும்.

ஆனால் இம் மறைமுகயுத்தத்திற்கு எல்லையுண்டு. அதாவது பொறுமைக்கும் ஒரு எல்லை உண்டு என்பதுபோல் இந்த எல்லை தற்பொழுது எட்டப்படும் அளவிற்கு வளர்ச்சி கண்டுள்ளது. விடு தலைப்புலிகள் தரப்பிலிருந்தும் இது சுட்டிக்காட்டப்படும் ஒன்றாகி யுள்ளது. நேற்று முன்தினம் மட்டக்களப்பில் நிகழ்ந்த புலிகள் மீதான இரு தாக்குதல் சம்பவங்கள் குறித்து மட்டு-அம்பாறை மாவட்ட அரசியல்துறை விடுத்துள்ள அறிவிப்பில் சிறிலங்காப் பாதுகாப்புப் படைகள் யுத்தநிறுத்தத்தை வலுவிழக்கச் செய்யும் நடவடிக்கைகளை மேற்கொண்டு மீண்டும் ஒரு யுத்தத்தை முன்னெடுக்க வழிவகையைச் செய்தவண்ணமுள்ளனர் எனத் தெரிவித்துள்ளது.

ஆகையினால், அரசாங்கத்தரப்பு தற்பொழுது தமது நிலைப் பாட்டை தெளிவாக முன்னெடுக்கவேண்டும். சமாதானப் பேச்சு வார்த்தைகளில் எந்தவிதமான முன்னேற்றமும் காணப்படாத நிலையில் அரசாங்கம் மறைமுகப்போர் ஒன்றை நடத்து கையில் விடுதலைப்புலிகள் தரப்பில் எவ்வளவு காலத்திற்குத்தான் பொறுமைகாத்துக்கொண்டிருக்க முடியும். புலிகளின் எல்லை மீறிய பொறுமை தமிழர்களை அனாதரவாக்கிவிடும். இந்நிலையில் தான் அரசாங்கத்தரப்புப் பற்றி விடுதலைப்புலிகள் அறிந்துகொள்ள வேண்டிய தேவை/நிர்ப்பந்தம் முழு அளவில் எழுந்துவிட்டது.

புதிய இராணுவத் தளபதி தமது ஆரம்ப உரையில் சமாதானம் குறித்து பிரஸ்தாபித்தது என்னவோ உண்மைதான். ஆனால் அவர் தனது கூற்றுக்களை நிலைநிறுத்தும் வகையில் நடவடிக்கைகளை மேற்கொள்ளும் போதுதான் சமாதானம் குறித்து அவர் கூறியவை மெய்ப்படும் . அவ்வாறு இல்லாதுவிடில் அவரது பேச்சில் அர்த்தம் எதுவும் இருந்துவிடப்போவதில்லை.

# மக்களின் இயல்பான வழிபாட்டுக்கு படையினர் அனுமதிக்க வேண்டும்

## -வலி.வடக்கு பொது அமைப்புகள் மகஜர்

யாழ். வலிகாமம் வடக்குப் பிரதேசத்திலுள்ள இராணுவ அதி உயர் பாதுகாப்பு வலயங்களுள் முடக்கி வைக்கப்பட்டுள்ள வழி பாட்டு ஸ்தலங்களுக்கு சென்று மக்கள் இயல்பான முறையில் வழிபாடு நடத்தப் படையினர் அனுமதிக்க வேண்டுமென வலி காமம் வடக்குப்பகுதியைச் சேர்ந்த மதம்சார் அமைப்புக்களும், பொது அமைப்புக்களும் கோரிக்கை விடுத்துள்ளன.

இராணுவ அதிஉயர் பாதுகாப்பு வலயம் என்ற பெயரில் வலிகாமம் வடக்குப்பகுதியிலுள்ள இந்து மற்றும் கிறிஸ்தவ வணக்க ஸ்தலங்கள் படையினரால் முடக்கி வைக்கப்பட்டுள்ளன. இவற்றுள் பலவற்றிலுள்ள பெறுமதி வாய்ந்த நினைவுச்சின்னங்கள் வழிபாட்டுப் பொருட்கள் என்பன திருடப்பட்டி ருப்பதுடன் ஆலயங்களும் சேதமாக்கப்பட்டுள்ளன. இதனால் இப்பிரதேச மக்களின் கலை, கலாசார, பண்பாட்டு அம்சங்களில் பாரிய தாக்கங்கள் ஏற்பட்டுள்ளன.

எனவே இவற்றைக் கருத்திற் கொண்டு வலி.வடக்கு பாதுகாப்பு வலயங்களுக்குள் முடக்கிவைக்கப் பட்டுள்ள வணக்க ஸ்தலங்களைச் சென்று புனரமைக்கவும் அங்கு மக்கள் வழிபாடு நடத்தப் படையி னர் அனுமதிக்க வேண்டுமென கோரியுள்ள அப்பகுதி பொது அமைப் புக்களும் மதம்சார் அமைப்புக்க ளும் இது குறித்த மகஜர் ஒன் றையும் சிறிலங்காவின் அரச தலைமைக்கு அனுப்பி வைத்துள் ளனர். (33)

# கடந்த ஐந்துவருடங்களில் யாழ்.குடாவில் 4.9398 மிதிவெடிகள் அகற்றப்பட்டன

## -யாழ்.மாவட்ட மிதிவெடிகள் செயற்பாட்டு அலுவலகம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.குடாநாட்டில் கடந்த ஐந்து வருடங்களாக மேற்கொள்ளப்பட்டு வந்த மிதிவெடிகள் அகற்றும் நடவடிக்கைகள் மூலம் 4 இலட் சத்து 9 ஆயிரத்து 398 மிதிவெடி கள் அகற்றப்பட்டு இருப்பதாக யாழ்.மாவட்ட மிதிவெடிகள் செயற் பாட்டு அலுவலகம் தெரிவித் துள்ளது.

இவ்வாறு கடந்தகால ஆக்கிர மிப்பு நடவடிக்கைகளின் போது படையினரால் மிதிவெடிகள் புதைத்து வைக்கப்பட்டபகுதிகளில் பல்வேறு அமைப்புக்களால் மேற் கொள்ளப்பட்ட வெடிபொருட்கள் அகற்றும் நடவடிக்கைகள் மூலமே இவை அகற்றப்பட்டுள்ளன.

அந்த வகையில் வடமராட்சி கிழக்கில் 350768 வெடிபொருட் களும், தென்மராட்சிப் பிரதேசத்தில் 30248 வெடிபொருட்களும், வடம ராட்சியில் 10250 வெடிபொருட் களும், நல்லூர்ப் பிரதேசத்தில் 8931 வெடிபொருட்களும், யாழ்ப்பாணப் பிரதேசத்தில் 3174 வெடிபொருட்க ளும், வலிகாமம் பிரதேசத்தில் 825 வெடிபொருட்களும், தீவகப்பிர தேசத்தில் 190 வெடிபொருட்களும் அகற்றப்பட்டுள்ளன. (33)

# பதவிஉயர்வில் நியாயம் கேட்டு பொலிஸ் உத்தியோகத்தர் வழக்கு

(கொழும்பு)

பொலிஸ் திணைக்களத்திலுள்ள உயர் அதிகாரிகளின் முறைகேடான நடவடிக்கைகளினால் பொலிஸ் உத்தியோகத்தர் மத்தியில் அதி ருப்தி நிலை காணப்படுவதாகவும் நியாயம் கேட்டு அவர்கள் நீதி மன்றம் செல்ல தீர்மானித்துள்ள தாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

பல கொலை, கொள்ளை, போதைவஸ்து, கடத்திய வர்களிடமிருந்து இலஞ்சம் பெற்ற பொலிஸ் உத்தியோகத்தர்களுக்கு பொலிஸ் திணைக்களம் பதவி உயர்வு வழங்கியுள்ளது. இந் நிலைமை பாரிய குற்றச்செயல்களு டன் சம்பந்தப்பட்டவர்களுக்குப் பதவி உயர்வு வழங்கியுள்ளதால் தாம் புறக்கணிக்கப்பட்டு பாதிக் கப்பட்டுள்ளதாக பொலிஸ் உத்தி யோகத்தர் மற்றும் இடைநிலை அதிகாரிகள் கூறியுள்ளனர். இந்த அதிருப்தி நிலை உயர் அதிகாரி களின் அக்கறையின்மையால் தற்போது விரக்தியாக மாறியுள் ளது. இதனால் பாதிக்கப்பட்ட நாம் நியாயம் கேட்டு நீதிமன்றம் செல்வதற்கு தீர்மானித்துள்ளோம் எனக் கூறியுள்ளனர்.

# காங்கேசன் கடற்பரப்பு தவிர்ந்த ஏனைய இடங்களில் மீன்பிடிக்க அனுமதி

## ~ கடற்படை அதிகாரி தெரிவிப்பு ~

(கொழும்பு)

அதியுயர் இராணுவ பாதுகாப்பு வலயமான யாழ்.காங்கேசன்துறை கடற்பரப்பு தவிர்ந்த ஏனைய கடற் பிரதேசங்களில் மீன்பிடி நடவடிக் கையில் ஈடுபட மீனவர்களுக்கு பூரண அனுமதி வழங்கப்பட்டிருப்பதாக வடபகுதிக்கான கடற்படையின் கட்டளையிடும் அதிகாரி றியல் அட்மிரல் தயாதர்மசூரிய தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்; வடபகுதியில் பிடிக்கப்படும் மீனை நாட்டின் ஏனைய பகுதிகளுக்குக் கொண்டு செல்வதற்கான ஏற்பாடுகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவித்தார்.

# அரச ஊழியருக்கு உரிய பதவி உயர்வை ஐ.தே.முன்னணி அரசு வழங்கவில்லை

## - ஐ.ம.சு.முன்னணி குற்றச்சாட்டு

(கொழும்பு)

கடந்த அரசாங்கம் அரச ஊழியர்களுக்கு உரிய பதவி உயர்வுகளை வழங்கவில்லை என்று ஐ.ம.சு.மு.வின் பொதுச் செயலர் சுசில் பிறேம் ஜெயந்த கூறியுள்ளார்.

வேலை வாய்ப்புக்களை வழங் கக் கூடிய சந்தர்ப்பம் இருந்த போதும், கடந்த அரசாங்கம் அந்த வாய்ப்புக்களைத் தவறவிட்டுவிட்ட தாக அவர் குற்றம் சாட்டியுள்ளார்.

அரச ஊழியர்களை வேலைக் கமர்த்துவதற்கு அரச நிறுவனங் களில் வெற்றிடங்கள் பல இருந் ததாகவும், ஓன்பது இலட்சம் அரசாங்க ஊழியர்களை ஆறு லட்சமாகக் குறைக்கும் நோக்கம் ஐ.தேசியக் கட்சிக்கு இருந்தது என்றும் அவர் நேற்று முன்தினம் சாகமவில் பிரச்சாரக் கூட்டத்தில் கூறியுள்ளார்.

## கற்றல் உபகரண கண்காட்சி

மிருசுவில் றோமன் கத்தோ லிக்க தமிழ்க்கலவன் வித்தி யாலயமும், எழுதுமட்டுவாள் அரசினர் தமிழ்க் கலவன் வித்தி யாலயமும் இணைந்து நடத்தும் கற்றல் உபகரணக் கண்காட்சி மிருசுவில் றோமன் கத்தோ லிக்க தமிழ்க்கலவன் வித்தி யாலயத்தில் 9.07.04 வெள்ளிக் கிழமை காலை9.30 மணிமுதல் மாலை 9.30 மணிவரை இடம் பெறவுள்ளது. (28)

# யாழ். கரவெட்டிப் பகுதியில் "நிக்கொட்" அபிவிருத்திப் பணியில்

(யாழ்ப்பாணம்)

யாழ். வடமராட்சியிலுள்ள கரவெட்டிப் பிரதேசத்தில் நிக்கொட் அமைப்பினரால் கிராம அபிவிருத் தித்திட்டம் ஒன்று நடைமுறைப் படுத்தப்படவுள்ளது.

கடந்தகால போர் நடவடிக் கைகள், இடப்பெயர்வுகள் என்ப வற்றால் பாதிக்கப்பட்டு பின்தங்கிப் போயுள்ள கிராம மக்களின் கல்வி, பொருளாதாரம், சமூகமேம்பாடு ஆகியவற்றை மையமாகக் கொண்டே இத்திட்டம் நடை முறைப்படுத்தப்படவுள்ளது.

இதன் முதற்கட்டமாக கர வெட்டியிலுள்ள ஆட்டுப்பட்டிக் கிராமத்தில் பொருளாதாரம், கல்வி, சமூகமேம்பாடுகள் தொடர் பான தலைமைத்துவ, முகாமைத் துவ செயற்றிட்டங்கள் நடை முறைப்படுத்தப்படவுள்ளன. (33)

# பிரதான வீதிகளில் மின்விளக்குகள் "நிக்கொட்" நிறுவனம் நடவடிக்கை

யாழ். குடாநாட்டின் பிரதான வீதிகளில் தெருவோர வீதி மின்விளக்குகளைப் பொருத்துவதற்கு நிக்கொட் நிறுவனம் நடவடிக்கை எடுத்துள்ளது. பிரதேச அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் உலக வங்கியின் நிதியுதவியுடன் இவ்வாறான வீதியோர மின் விளக்குகளைப்பொருத்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இதன் அடிப்படையில் யாழ் குடாநாட்டிலுள்ள கண்டிவீதி, காங்கேசன்துறை வீதி, பருத்தித்துறைவீதி, பலாலி வீதி, மானிப்பாய்வீதி ஆகிய வீதிகள் உட்பட 15 வீதிகளுக்கு வீதியோர மின்விளக்குகள் பொருத்தப்படவுள்ளன. (33)

# சனாதிபதிக்கு நீதிமன்றம் உத்தரவிட முடியாது

## மக்கள் நலன்புரி நிதிய மனு நீதிமன்றால் நிராகரிப்பு

(கொழும்பு)

சுதந்திர தேர்தல் ஆணைக்குழுவிற்கு அங்கத்தவர்களை நியமிக்க சனாதிபதிக்கு உத்தரவிடுமாறு கோரி பொதுமக்கள் நலன்புரி நிதியம் தாக்கல் செய்த மனுவை உயர் நீதிமன்றம் நிராகரித்துள்ளது.

பொதுமக்கள் நலன்புரி நிதியம் சார்பில் ஆஜரான சட்டத்தரணி துஷாந்த வெலி அமுன அரசியல் யாப்பின் பதினேழாவது திருத்தத்திற்கு அமைய சுதந்திர தேர்தல் ஆணைக்குழுவிற்கு அங்கத்தவர்களை நியமிக்குமாறு நீதிமன்றம் சனாதிபதிக்கு உத்தரவிட முடியும் என வாதிட்டார்.

இதேவேளை சட்டமா அதிபர் சார்பில் ஆஜரான மேலதிக சொலிசிட்டஜெனரல் ஏ.ரட்டநாயக்க அரசியல் யாப்பிற்கான பதினேழாவது திருத்தம் அமுலில் உள்ள போதிலும் அரசியல் யாப்பின் 35 வது வாசகத்தின் மூன்றாம் பிரிவிற்கமைய சனாதிபதிக்கு நீதிமன்றம் உத்தரவிடமுடியாதென வாதிட்டார். சட்டமா அதிபரின் இந்த வாதத்தை ஏற்றுக் கொண்ட உயர் நீதிமன்றம் பொதுமக்கள் நலன்புரி நிதியத்தின் மனுவை நிராகரித்தது.

# ரவிகருணாநாயக்கவிற்கு முன் பிணை வழங்க அனுமதி

(கொழும்பு)

பாராளுமன்ற உறுப்பினரும், முன்னாள் அமைச்சருமான ரவி கருணாநாயக்கவுக்கு முன்பிணை வழங்குவதற்கு கொழும்புக் கோட்டை நீதிமன்றம் அனுமதியளித்துள்ளது. தனக்கு முன்பிணை அனுமதி வழங்குமாறு ரவி கருணநாயக்க தாக்கல் செய்த மனுவை பரிசீலித்த பின்னரே கொழும்பு கோட்டை நீதிபதி சரத் கருணாரத்ன இந்த அனுமதியை வழங்கியுள்ளார். ஆனால் ரவி கருணாயக்கவின் கடவுச்சீட்டை நீதிமன்றத்தில் ஒப்படைக்குமாறு நீதிபதி உத்தரவிட்டுள்ளார்.

# விவசாய உபகரணங்களுக்கு பெறுமதி சேர்வரி இரத்து

(கொழும்பு)

விவசாய உபகரணங்கள் மற்றும் உள்ளீடுகளுக்கான பெறுமதிசேர்வரி இரத்துச்செய்யப்பட்டுள்ளது.

இம்மாதம் முதலாம் திகதி முதல் இது நடைமுறைக்கு வருகின்றதாகவும், இதன் மூலம் உரத்தின் விலை நூறுரூபாவினால் குறைய உள்ளதாக விவசாய அமைச்சர் அனுரகுமார திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

விவசாய அமைச்சில் நேற்று நடைபெற்ற பத்திரிகையாளர்கள் சந்திப்பின் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், பெறுமதி சேர்வரி நீக்கப்பட்டுள்ளமையால் பசளைகளின் விலையைக் குறைப்பதற்கு முன்னணி நிறுவனங்கள் இணங்கி உள்ளதாகவும் தெரிவித்தார்.

# உ.மு.கா. உறுப்பினர் ஐ.தே.க. இல் இணைந்தது அதிர்ச்சியும் ஆச்சரியத்தையும் தருகிறது

## -அஷ்ரப் காங்கிரஸ் தலைவர் தெரிவிப்பு

(கொழும்பு)

சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸின் இரு அதியுயர்பீட உறுப்பினர்கள் ஐக்கிய தேசியக் கட்சியில் அங்கத்துவம் பெற்றுள்ளமை அதிர்ச்சியும், ஆச்சரியமும் தருவதாக அஷ்ரப்காங்கிரசின் தலைவர் தெரிவித்துள்ளார்.

பசீர் சேகுதாவூத் மற்றும் சட்டத்தரணி நிஜாமூதீன் ஆகியோரே சிறிலங்கா முஸ்லிம் காங்கிரசில் இருந்து ஐக்கியதேசியக் கட்சியில் அங்கத்துவம் பெற்றவர்களாவார்.

அஷ்ரப் காங்கிரசின் தலைவர் சுபைதீன் இதுதொடர்பாக விடுத்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கையில்;

முஸ்லிம் காங்கிரசின் யாப்பு அதன் அங்கத்தவர்கள் பிறிதொரு கட்சியில் அங்கத்துவம் பெற முடியாது என்பதை சுட்டிக்காட்டுவதாகவும்

இந்த அதியுயர் பீட உறுப்பினர்கள் ஐக்கியதேசியக் கட்சியில் உறுப்புரிமை பெற்றதை இட்டு முஸ்லிம் காங்கிரஸ் மௌனம் சாதிப்பதனால் அதன் தலைமைத்துவமும் இதற்குத் துணைபோகின்றதா என்ற சந்தேகத்தை ஏற்படுத்தியுள்ளதாகவும்,

ஐக்கிய தேசியக் கட்சியிடம் அது தன்னை அடகுவைத்துள்ளது என்பதை எடுத்துக்காட்டுவதோடு முஸ்லிம் காங்கிரஸ் அதன் தனித்துவத்தையும், சுயாதீனத்தையும் இழந்து வருவதாகவும் அதில் குறிப்பிட்டுள்ளது.

### அதிகாரிகள் குழு விஜயம்

(அலுவலகசெய்தியாளர்)

"துணுக்காய், முல்லைத்தீவு வலயங்களிலுள்ள மாதிரிப் பாடசாலைகளை மேற்பார்வையிடுவதற்கு வடக்கு-கிழக்கு மாகாண கல்வி அமைச்சின் சிரேஷ்ட உதவிச் செயலாளர் திரு.எஸ்.மகாலிங்கம் தலைமையில் குழுவொன்று வருகை தந்துள்ளது.

இன்று துணுக்காய் வலய மாதிரிப் பாடசாலைகளை தரிசிப்பதுடன், நாளை மு/மாங்குளம் ம.வி. இல் அப்பாடசாலைகளில் தரம் 05,11,13களில் தமிழ், விஞ்ஞானம், கணிதம், ஆங்கிலம் கற்பிக்கும் ஆசிரியர்களுடன் கலந்துரையாடுவதற்கும் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளது. இவ்வாறே முல்லை. வலய மாதிரிப் பாடசாலைகளை நாளை மறுதினம் மேற்பார்வை செய்து வரும் சனிக்கிழமை மேற்படி பாடங்களுக்கான அசியர்களை மு/ஸ்ரீசுப்பிரமணிய வித்தியாசாலையில் சந்திப்பதற்கும் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதென துணுக்காய் வலயக் கல்விப் பணிப்பாளர் மா.தேவேந்திரன் தெரிவித்துள்ளார். (சோ,கு)

# சு.கட்சி வேட்பாளரின் லொறிக்கு இனந்தெரியாதோர் தீவைப்பு

(கொழும்பு)

சுதந்திரக் கட்சியின் மாகாண சபை வேட்பாளரான போட்டிலால் பெரோவின் லொறியை வீட்டில் வைத்து இனந்தெரியாதோர் தீயிட்டுக் கொழுத்தியுள்ளனர்.

வேட்பாளர் நொச்சியகம பிரதேசத்தில் தேர்தல் பிரசாரத்தில் ஈடுபட்டுக்கொண்டிருந்த வேளை இச்சம்பவம் இடம் பெற்றுள்ளது.

# அரச ஊழியருக்கு 2 லட். வீடுகள் கட்டிக் கொடுக்க அரசு நடவடிக்கை

இரண்டு இலட்சம் வீடுகள் மாகாணசபை மூலமாக அரசாங்க உத்தியோகஸ்தர்களுக்கு கட்டி கொடுப்பதற்கு அரசு நடவடிக்கை எடுத்துள்ளது. சகல மாவட்டங்களிலும் உள்ள அரசாங்க அதிபர்களுக்கும் அதற்கான காணிகளை ஒதுக்கீடு செய்து அறிவிக்குமாறும் வீடுகள் கட்டிக் கொடுப்பதற்கு தகுதி உடையவர்களின் பெயர்களை அறிவிக்குமாறு வீடமைப்பு நிர்மானத்துறை அமைச்சு அறிவித்துள்ளது.

## 20ஆம் திகதிக்குமுன்னர்

# பாராளுமன்றத்தைக் கூட்ட எதிர்க்கட்சிகள் கோரிக்கை

(கொழும்பு)

சிறிலங்காவின் பிரதமர் மகிந்தராஜபக்ஷவை எதிர்க்கட்சிகள் நாளை சந்திக்கவுள்ளன. அண்மையில் நடைபெற்ற எதிர்க்கட்சிகளின் தலைவர்களுக்கான கூட்டத்தில் எடுக்கப்பட்ட தீர்மானத்தின் படி வரும் இருபதாம் திகதிக்கு முன்னர் நாடாளுமன்ற கூட்டத்தை கூட்டப்பட வேண்டுமென எடுத்த தீர் மானத்தை இச்சந்திப்பின் போது பிரதமரிடம் வலியுறுத்தவுள்ளனர்.

நாட்டில் ஏற்பட்டுள்ள பொருளாதார வீழ்ச்சி மற்றும் டெங்குநே ப் தீவிரம் தொடர்பாக பாராளுமன்ற கூட்டத்தில் முக்கியமாக ஆராய வேண்டுமென 'வும் எதிர்கட்சிகள் தமது தீர்மானத்தில் குறிப்பிட்டுள்ளன.

### முச்சக்கர...

போக்குவரத்துப் பிரிவினர் மேற்கொண்டுவருகின்றனர்.

சம்பவத்தில் முச்சக்கரவண்டி பலத்த சேதத்திற்குள்ளாகியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (சோ,கு)

### வடமராட்சி...

கள் சிக்கிக்கொண்டிருக்க சாத்தியமில்லையென மீனவ சங்க வட்டாரங்கள் தெரிவிக்கின்றது.

எனினும் கடற்படை ரோந்துப் படகொன்றினால் இவர்களது படகு மோதுப்பட்டிருக்கலாமென சில செய்திகள் வெளிவந்திருந்தது குறிப்பிடத்தக்கது. (27)

### நோர்வே...

இருநாடுகளின் வெளியுறவுத்துறை அமைச்சர்கள் மட்டக் கூட்டு ஆணைக்குழு ஒன்றை அமைத்து இருதரப்பு உறவுகளை மேலும் வலுப்படுத்துவதற்கான வழிவகைகளைக் காண்பதற்கான உடன்படிக்கை ஒன்றில் கைச்சாத்திடுவது என்றும் முடிவெடுத்துள்ளனர்.

இது குறித்து கருத்துத் தெரிவித்த நோர்வே வெளியுற்வுத்துறை அமைச்சர்ஜான் பீற்றர்சன்கலந்துரையாடலில் முக்கியமான விடயமாக சிறிலங்காவின் எதர்கால நிலைமைகள் குறித்து ஆராயப்பட்டது. அரசு-புலிகளுக்கிடையிலான சமாதானப் பேச்சுவார்த்தையைப் புதுப்பிப்பதில் பதட்டமான நிலைமைகள் வளர்ச்சி கண்டு வருகின்றன என்றார்.


நாளை மறுதினம் ஆரம்பமாகின்றது

12 வடருங்களின் பின்னர் மீண்டும்

திருமறைக் கலாமன்றம்

தயாரித்து வழங்கும்

ஞானசௌந்தரி

(இசை நாடகம்)

ஒரு தசாத காலத்திற்கு முன்னர் நீங்கள் பார்த்து உங்கள் மனங்களில் நிறைந்த

ஞானசௌந்தரியை

மீண்டும் ஒருமுறை பார்த்திட அரிய சந்தர்ப்பம்.

ஆசனங்களுக்கான பதிவுகளை யாழ் மன்ற அலுவலகத்தில் செய்துகொள்ளலாம்

ஜூலை-09,10,11-2004 (வெள்ளி,சனி,ஞாயிறு) மன்ற அரங்கில் மாலை 07.00 மணிக்கு

அன்பளிப்பு-30/=

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்

238,பிரதான வீதி,
யாழ்ப்பாணம்.
தொ.பேசி:-0212222393

திருமறைக் கலாமன்றம்



பயிற்சிநெறி ஆரம்பம்

எமது நிறுவனத்தினால் கீழ்காணும் பயிற்சிகளுக்குப் பெண்கள் சேர்க்கப்பட உள்ளனர். பயிற்சி முடிந்ததும் உடன் தொழில் வழங்கப்படும்.

கைப்பணி பயிற்சி
மரவேலை
இலத்திரனியல் பயிற்சி

போக்குவரத்து, வதிவிட ஒழுங்கு பயிற்சி யாவும் இலவசமாக வழங்கப்படும். 12-07-2004 முன் தொடர்பு கொள்ளவும்.

பெண்கள் அபிவிருத்தி புனர்வாழ்வு நிறுவனம். (காவல்துறை அருகாமை)
முதன்மைச் செயலகம்,
யாழ். சாலை,
கிளிநொச்சி.

(4778)



பாராட்டி வாழ்த்துகின்றோம்



எமது கல்லூரியின் அதிபராக, பூநகரி, கரைச்சி கோட்ட அலுவலராக, பிரதிக் கல்விப் பணிப்பாளராகக் கடமையாற்றி ஓய்வு பெறும்

திரு. க. சிவசாமி

அவர்கள் ஆற்றிய சேவையினைப் பாராட்டுவதுடன், இடம்பெயர்ந்து அல்லற்பட்ட வேளையில் சேவையாற்றியமைக்கு நன்றி தெரிவித்து, இன்றைய பிறந்தநாளும் அவருடைய ஓய்வுக்காலமும் சிறப்புற அமைய இறையருள் வேண்டி வாழ்த்துகின்றோம்.

அதிபர், பிரதி அதிபர்,
ஆசிரியர்கள், பணியாளர்கள்,
கிளி. இந்துக் கல்லூரி.

(சி-10003)


இப்பத்திரிகை கிளிநொச்சி ஈழநாதம் பணிமனையில் 2004ஆம் ஆண்டு யூலை மாதம் 07 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.